# கொழும்பு-திருமலை பஸ் புரண்டது


Registered as a NewsPaper in Ceylo

விலை சதம் 15 ★ ☆

ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 12
இதழ்: 102
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் வைகாசி 10 ரபி. அவ் 17 ஞாயிற்றுக்கிழமை [24-5-70]



பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்




டொலர் கோர்ப்பரேஷன



JAFFNA COLLEGE
25 MAY 1970
UNDERGRADUATE LIB


# மூவர் பலி!

## 46 பேர் படுகாயம்

கொழும்பு, சனி

மரமொன்றுடன் மோதி பள்ளத்தினுள் உருண்டு விழுந்தது இ. போ. ச பஸ்! மூவர் துடிதுடித்து ஸ்தலத்திலேயே மாண்டனர். 46 பேர் படுகாயத்துக்குள்ளானார்கள்

கொழும்பிலிருந்து திருகோணமலை நோக்கி எண்பத்தினான்கு பிரயாணிகளுடன் வந்துகொண்டிருந்த பஸ்சே இன்று அதிகாலை 4 மணியளவில் கந்தளாய்ச் சந்திக்கருகில் கோர விபத்தில் சிக்கியது.

நேற்றிரவு 10 மணியளவில் கொழும்பிலிருந்து பிரயாணிகளுடன் விபத்துக்குள்ளான பஸ் புறப்பட்டது. இன்று அதிகாலை 4 மணியளவில் கந்தளாய்ச் சந்திக்கு அருகில் வந்த போது இவ் விபத்து நடந்தது. திடீரென மரத்தில் மோதி பள்ளத்தில் பாய்ந்தது.

பெண்கள் குழந்தைகளின் ஐயோ ஐயோ என்ற அவலக் குரல் வானைப் பிளந்தது.

திருகோணமலை ராணுவத்தைச் சேர்ந்த 'கன்னர்' ஞானரத்தின, பிரயாணஞ் செய்து கொண்டிருந்த மூதூர் டிப்போவைச் சேர்ந்த பஸ் கண்டக்டர் ஹேமச்சந்திரா சுபத்திரா நரந்தெனியா ஆகியோரே இறந்தவர்களாவர்.

காரைநகரைச் சேர்ந்த ஏ. தம்பிராசா, கண்டியைச் சேர்ந்த கே ஏ. இராசசிங்கம் அனலைதீவைச் சேர்ந்த நாகலிங்கம் ஆகியோர் காயமடைந்தவர்களில் ஒருசிலர். ஏனையோர் பெரும்பாலும் திருகோணமலையைச் சேர்ந்தவர்கள்.

(சி.பி ஏ - திருமலை)

# 27-ந் திகதி உலகம் முழுவதும் தேர்தல் முடிவுகள் கேட்கும!

## நமது தேசியக் கொடியில் முஸ்லிம்களுக்கு இடமளித்தவர் ஜி. ஜி.

### முன்னாள் அட்டோர்ணி ஜெனரல் அமீர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், சனி

'மதத்தை அழிக்கும்மார்க்ஸியவாதிகளைக் கொண்ட கூட்டு முன்னணியுடன் சேராது ஜனநாயகத்தையும் மதத்தையும் காப்பாற்றும் ஐக்கியதேசியக் கட்சியுடன் இணைந்து செயல்படும் கட்சியை அனுப்புவது ஒவ்வொரு முஸ்லிம் மகனது கடமையாகும்' என்று ஜின்னா மைதானத்தில் யாழ்ப்பாணத் தொகுதி அபேட்சகராகப் போட்டியிடும் தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்தில் முன்னாள் அட்டோர்னிஜெனரல் திரு. ஏ. சி. எம் அமீர் பேசும்போது கூறினார்.

திரு எம் சி அப்துல்லத்தீப் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. அமீர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

'தொடக்ககாலத்திலேயே ரி பி ஜயா போன்ற முஸ்லிம் தலைவர்களுடன்சேர்ந்து திரு பொன்னம்பலம் முஸ்லிம்களுக்காக உழைத்தார். முஸ்லிம்கள்மீது ஜி ஜி என்றும் பற்றுக் கொண்டவர். இலங்கைத் தேசியக் கொடியினிலும் பார்க்க ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர் அதிகம் முஸ்லிம்களுக்கு செய்துள்ளார்கள் எனக் கூறுவது முற்றிலும் தவறு. ஒரு முஸ்லிமை முதல் அட்டோர்னி ஜெனரலாக்கிய பெருமை ஐக்கியதேசியக் கட்சியையே சாரும். பதியுதீன் முகமத் தலைமையிலுள்ள இஸ்லாமிய சோஷலிஸ முன்னணி முஸ்லிம்களை தவறானபாதையில் இட்டுச் செல்கின்றது. 1956க்கு முன் யார் எனத் தெரியாதிருந்த பதியுதீன் முகமத் எவ்வாறு முஸ்லிம்களுக்கு தலைமை தாங்க முடியும்? மார்க்ஸியவாதிகளுடன் சேர்ந்துள்ள பதியுதீன் முகமத் இஸ்லாம் மதத்தைக் காப்பாற்றுவார் என எவ்வாறு கூறமுடியும். முஸ்லிம்களுக்கு பதியுதீன் செய்த சேவை இரண்டு முஸ்லிம் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையை மூடியதும் சகிராக் கல்லூரியை தேசியமயமாக்கியதும்தான்.

**தேசிய தலைவர் ஜி. ஜி.**

செனட்டர் ரணசிங்கா பேசுகையில் 'திரு ஜி ஜி பொன்னம்பலம் தமிழ்த் தலைவர் மட்டுமல்ல, சிங்கள-முஸ்லிம்களுக்கும் தலை...

...யாக் கல்லூரிக்கு ஒரு லட்சத்து 65 ஆயிரம் ரூபா ஒதுக்கச் செய்துள்ளேன்' பொம்மை வெளியில் சுமார் 160 குடும்பங்களுக்கு வீடு கட்ட வசதிசெய்து கொடுத்துள்ளேன். அதற்கானநடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

பள்ளிக்குடாவில் 200முஸ்லிம் குடிகள் குடியேற வசதி செய்து கொடுத்தேன். ஆனால் மையவாடிப் பிரச்னையில் என்னைக் குற்றவாளி என்கிறார்கள். உண்மையில் அதற்கு நான் பொறுப்பாளி அல்ல. என்மீது வேண்டுமென்றே அரசியல் எதிரிகள் குற்றம் சுமத்துகிறார்கள். நான் தமிழர், முஸ்லிம்கள் என்ற பேதம் பார்த்தது என்றுமே இடையாது மதம் வேறுபட்டாலும் எம்மில் ஒருவராகவே முஸ்லிம் மக்களை கருதிவந்துள்ளேன்' என்றார்.

தார்

1966ம் ஆண்டு உணவு அமைச்சரானார்

அவரது ... காரணமாக இந்திய அரசு திருமேனன் தலைமையிலான அமைச்சியின் ... உள்ளது

## அம்புலியில் கொடிய கிருமி உண்டாம்

### அமெரிக்க விஞ்ஞானிகள் கூறுகிறாகள்

வாஷிங்டன் மே. 23

அப்பலோ 12 விண்வெளி வீரர்கள் அம்புலியிலிருந்து பூமிக்கு கொண்டுவந்த படப்பிடிப்புக் கருவியில் சில கிருமிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த நவம்பர்மாதம் சார்ள்ஸ் கொன்ராட்டும் அலன்பீனும் சந்திரனிலிருந்து திரும்பக்கொண்டு வந்த சர்வேயர் 3 என்ற படிப்பிடிப்புக் கருவியில் 'எஸ்டெட்டோகோச்சோ என்ற விண்வெளிக் கிருமிகள் இருக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

990 நாட்கள்வரை சந்...

கிருமி இருப்பதாக கண்டுபிடித்துள்ளனர், சந்திரனில் எதுவித கிருமியும் இல்லையென்று இதுவரை அமெரிக்க விஞ்ஞானிகள் தெரிவித்துவந்தது தெரிந்ததே.

## ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஏற்பாடுகள் பூர்த்தி

கோட்டை, சனி

பொதுத்தேர்தல் முடிவுகள் தேர்தல் தினமான 27ம் திகதியே உடனடியாக ஐரோப்பிய நாடுகள், தென்கிழக்காசியா, இந்தியா, இலங்கை மற்றும் தூரகிழக்கு நாடுகளுக்கு அறிவிப்பதற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியாகிவிட்டன. இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் தேர்தல் முடிவுகளை உடனுக்குடன், இரவோடு இரவாக ஒலிபரப்பும்.

நாடு பூராகவும் உள்ள வாக்கெண்ணும் நிலையங்களுக்கும், இலங்கை ஒலிபரப்புக கூட்டுத்தாபன தலைமை அஞ்சல் நிலையத்துக்குமிடையே தேர்தல் தினத்தன்று ஒலிபரப்புத்தொடர்பு ஏற்படுத்தப் பட்டுள்ளது. இந்நிலையங்களில் கடமையாற்றும் ஒலிபரப்பு ஊழியர்கள் ... தந்த இடங்களுக்குச் ... இன்றனர். வாக்கெண்ணும் ...

...பரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு அறிவிக்கப்படும் முடிவுகளை, கூட்டுத்தாபனம் உடனடியாக உலகம் முழுவதும் ஒலிபரப்பும்.

ஒரேதடவையில், உலகத்தின் பல பாகங்களுக்கும் நமது நாட்டுக்கும் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படு... முதல் தடவை ... இலங்கை, ஐரோப்பா, தென் கிழக்காசியா, ...

## மயிலிட்டியில் கோஷ்டிச் சண்டை; 7 பேர் காயம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

மயிலிட்டியில் நேற்றுக் காலை நடைபெற்ற கோஷ்டிச் சண்டையொன்றில் 7 பேர்வெட்டுக்காயங்களுக்குள்ளாகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ... வாள் வெட்டுவரை வளர்ந்ததாக பொலிஸ் விசாரணையில் தெரிவிகப்பட்டது.

**கலவரங்களுக்கு**

சிவசேனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்பிடிப்புக் கருவியில் 'எஸ்டெட்டோகோச்சோ என்ற விண்வெளிக் கிருமிகள் இருக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

990 நாட்கள்வரை சந்திரனில் கிடந்த இந்த படிப்பிடிப்புக் கருவியை அப்பலோ 12 வீரர்கள் பூமிக்குகொண்டுவந்தனர் 5மாத ஆராய்ச்சியின்பின் இதில் பூமியில் உள்ளமனிதரையே தாக்கக்கூடிய

யாழ்ப்பாணம், ஞாயிறு

மயிலிட்டியில் நேற்றுக் காலை நடைபெற்ற கோஷ்டிச் சண்டையொன்றில் 7 பேர்வெட்டுக்காயங்களுக்குள்ளாகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் மூவரின் நிலைமை மோசமாகயிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

இரு குடும்பங்களுக்கிடையே ஏற்பட்டதகராறு கத்திவெட்டு, பொல்லடி வாள்வெட்டுவரை வளர்ந்ததாக பொலிஸ் விசாரணையில் தெரிவிககப்பட்டது.

# தேடப்பட்டவர் மன்னாரில் கைது

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணத்தில் உள்ள பல கடைகளை உடைத்துத் திருடியவர் எனப் பொலிசாரால் சந்தேகத்தின் பேரில் தேடப்பட்டு வந்த 'ஆசாமி' மன்னாரில் சிக்கினார்.

யாழ்ப்பாணக் குற்றத் தடுப்புப்பகுதிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. இராஜேஸ்வரன், திரு. இரத்தினம் ஆகியோர் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியிடம் இவர் மாட்டிக்கொண்டார்.

கடந்த சில தினங்களாக எஸ். பாலேந்திரா என்ற இந்த நபரைப் பொலிசார் சந்தேகத்தின்பேரில் தேடிக்கொண்டுவந்தனர். யாழ்ப்பாணம் பிரதானவீதி, பிரவுண் ரோடு ஆகிய இடங்களில் நடந்த கடை உடைப்புத் திருட்டுகளில் இவர் சம்பந்தப்பட்டதாகக் கருதப்படுகிறார்.

சுமார் இருபதினாயிரம் ரூபாய்க்கு மேலான பொருட்களையும் ரொக்கப் பணத்தையும் இவர் களவாடியிருப்பதாகப் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இத்திருட்டுகள் சம்பந்தமாக கைதுசெய்யப்பட்டுள்ள இந்த ஆசாமியுடன் மற்றும் சிலரும் சேர்ந்திருக்கலாமெனப் பொலிசார் நம்புகின்றனர்.

கைதுசெய்யப்பட்ட நபர் தொடர்ந்து பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுப் புலன்விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

அடுத்த மாதம் 5ந் தேதி யாழ்ப்பாண மாஜிஸ்திரேட் முன் ஆஜர்செய்யப்படுவார்

(குவிம)

## கலவரங்களுக்கு சிவசேனை காரணமல்லவாம்

பம்பாய், மே, 23

மராட்டிய மாநிலத்தில் நடைபெற்ற இனக் கலவரத்திற்கு தாம் காரணமல்ல என சிவசேனைத் தலைவர் பால்தாக்ரே கூறினார்.

பாராளுமன்றத்தில் திரு. சவான் விடுத்த அறிக்கையை மறுத்து விடுத்த அறிக்கையில் திரு. பால்தாக்ரே மேலும் கூறியுள்ளதாவது:-

பம்பாயைச் சுற்றிலும் கலவரம் நடைபெறும்போது பம்பாயில் கலவரம் ஏதும் நடைபெறவில்லை. சிவசேனைக்கும், கலவரத்திற்கும் தொடர்பில்லை என நிரூபிக்க இதொன்றேபோதுமானது. சிவசேனை முஸ்லீம் மக்களுக்கு எதிரான இயக்கமல்ல.

பாராளுமன்றத்தில்சவான் கலவரத்தில் சிவசேனைக்கும் தொடர்புண்டு எனக்கூறியது முற்றிலும் தவறு கலவரத்திற்குயார் காரணம் என உண்மை நிலைமை புலப்படும்.

...தன்று ஒலிபரப்புத்தொடர்பு ஏற்படுத்தப் பட்டுள்ளது. இந்நிலையங்களில் கடமையாற்றும் ஒலிபரப்பு ஊழியர்கள் இன்று அந்தந்த இடங்களுக்குச் செல்கின்றனர். வாக்கெண்ணும் நிலையங்களிலிருந்து ஒலி

ஒரேதடவையில், உலகத்தின் பல பாகங்களுக்கும் நமது நாட்டுக்கும் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படுவது இதுவே முதல்தடவையாகும். இலங்கை, ஐரோப்பா, தென் கிழக்காசியா, இந்தியா, தூரகிழக்கு நாடுகள் போன்ற பல பாகங்களிலுமுள்ள மக்கள் தேர்தல் முடிவுகளை ஒரே நேரத்தில் அறிந்துகொள்ள இது வழிவகுக்கிறது.

தேர்தல் தினத்தன்று இரவு இரவாக முடிவுகள் அறிவிக்கப்படும். தொடர்ந்து மறுதினமும் முடிவுகள் அறிவிக்கப்படும் என நேற்று இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ரி பி ஜயா போன்ற முஸ்லிம் தலைவர்களுடன்சேர்ந்து திரு பொன்னம்பலம் முஸ்லிம்களுக்காக உழைத்தார். முஸ்லிம்கள்மீது ஜி ஜி என்றும் பற்றுக் கொண்டவர். இலங்கைத் தேசியக் கொடியில் முஸ்லிம்களைக் குறிக்கும் பச்சை நிறத்தை சிபாரிசு செய்தவரும் திரு ஜி ஜி பொன்னம்பலமே. தமிழர் வரலாற்றில் மாற்றம் ஏற்படுத்திய குற்றவாளி தமிழரசுக் கட்சியராகும். முஸ்லிம்கள் ஒருபோதும் சமஷ்டியை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். தமிழரசுக் கட்சியினர் கூட்டணியினருடன் சேரப் போவதாகச் செய்திகள் கூறுகின்றன. ஐக்கிய தேசிய கட்சி

### தேசிய தலைவர் ஜி. ஜி.

செனட்டர் ரணசிங்கா பேசுகையில் 'திரு ஜி ஜி பொன்னம்பலம் தமிழ்த் தலைவர் மட்டுமல்ல, சிங்கள-முஸ்லிம்களுக்கும் தலைவர். அவர் தேசியத்தலைவர் அவரைப் பிரதிநிதியாகத் தெரிவு செய்வது உங்களுக்குப் பெருமை' என்றார்.

திரு ஜி ஜி பொன்னம்பலம் பேசுகையில் 'பொன்னன் முஸ்லிம்களுக்கு என்ன செய்தான் எனக் கேட்கின்றார்கள். முஸ்லிம் மக்களின் கல்வி விருத்திக்காக பல லட்சக்கணக்கான பணத்தை அரசாங்கத்தைக் கொண்டு ஒதுக்கினேன். தற்போது ஒஸ்மானி

## அரசாங்க சேவை பொறியியலாளர் குறிப்பிட்ட நேரம் மட்டும் வேலை செய்ய முடிவு

கொழும்பு, சனி

சகல அரசாங்க பொறியியலாளர்களும் சட்டத்துக்கமைய தங்களது கடமையைச் செய்வதென முடிவு செய்துள்ளனர். உரிய நேரத்தில் வேலைக்குவந்து, உரிய நேரத்தில் வீடு திரும்புவதென அவர்கள் முடிவுசெய்துள்ளனர்.

மகாவலி அபிவிருத்தி சபையில் அங்கத்தவர்கள் நியமனம் சம்பந்தமாக எழுந்துள்ள கருத்து வேறுபாடுகளைத் தொடர்ந்து இம் முடிவு எடுக்கப்பட்டது. அரசாங்க பொறியியலாளர்களை இதில் நியமிக்கும்படி அரசாங்க சேவை பொறியியலாளர் சங்கம் கோரியிருந்ததாயினும், அரசாங்கம் இதில் செவிமடுக்கவில்லையாம். நேரசூசிகைக்கு அமைய வேலை செய்வதென்ற முடிவின்படி கடந்த வாரம் தொடக்கம் நீர்பாசன இலாகாவைச் சேர்ந்த சுமார் 180 பொறியியலாளர்கள் வேலைசெய்து வருவது குறிப்பிடத்தக்கது.

(சி: பி. ஏ)

# இந்திய சட்டமந்திரி கோவிந்தமேனன் காலமானார்

புதுடில்லி மே,23

இந்தியாவின்சட்டமந்திரி திரு. பி கோவிந்த மேனன் இன்று காலமானார். மரணமாகும் பொழுது திரு. மேனனுககு 6 வயது.

சட்டமந்திரி திரு. கோவிந்த மேனன் சிறிது காலமாகவே சுகவீனமுற்றிருந்தார் நேற்று அவருக்கு நெஞ்சில் வலி அதிகமானதால் புதுடில்லி வெலிங்டன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். இன்று காலையில் அவரது உடல்நிலை மோசமாகியது. காலை பத்தரைமணிக்கு நிலைமை மிகவும் கவலைக்கிடமாக மாறியது டாக்டர்கள் திருமேனனின் உயிரைக் காப்பாற்றுவதற்காக பெரு முயற்சிகள் எடுத்தார்கள் ஆனல் 11-45 மணிக்கெல்லாம் அவர்உயிர துறந்து விட்டதாக அறிவிக்கப்பட்டது.

திரு மேனனின்மரணம்பற்றி இன்று காலையில் ராஜ்ய சபை கூடிய பொழுது உபராஷ்டிரபதி திரு பாத்தக் அறிவித்தார், சபை அவரது மறைவுக்கு புகழ் அஞ்சலி செலுத்திய பின் நாள்குறிப்பிடாமல் ஒத்திப்போடப்பட்டது.

திரு மேனன் 1967-ம் ஆண்டுமுதல் பாரதத்தின் சட்ட மந்திரியாக இருந்து வந்துள்ளார் 1968ம் ஆண்டு தொடக்கம் சமூக சேவைகள் துறையையும் அவர் வகித்து வந்தார் 1935 ம் ஆண்டு தொடக்கம் திரு மேனன் 1948ம் ஆண்டு வரையில் கொச்சி சட்ட சபையில் நான்கு முறை அங்கத்தவராக விருந்தார் அச்சபையில் மந்திரி பதவிகளையும் வகித்துவந்தார் கொச்சி சமஸ்தான பிரதம மந்திரியாகவும் இருந்துள்ளார் அரசியல் நிர்ணய சபையில் அவர் அங்கம வகித்திருக்கிறார்

1953ல் ஜெனிவாவில் இடம் பெற்ற சர்வதேச தொழிலாளர் நலன் ஸ்தாபன மகாநாட்டிற்கு இந்திய தூதுகோஷ்டிக்குத் தலைமை வகித்துச் சென்றார்

1962ம் ஆண்டு லோக் சபைகு அவர் தெரிவு செய்யப்படடார் 1963ல் பெல்கிரேட்டில்நடைபெற்ற பாராளுமன்ற அங்கத்தவர் மாநாட்டிற்கு இந்தியக கோஷ்டிக்கு த்தலைமைவகித்தார

1966ம் ஆண்டு உணவு அமைச்சரானார்

அவரது மறைவின் காரணமாக இந்திய அரசு திரு மேனன் தலைமையிலான அமைச்சியின் கீழ் உள்ளநிறுவனஊழியர்களுக்கு சம்பளத்துடன் விடுமுறைவழங்கியிருக்கின்றது.

திரு மேனன் காலமான செய்தி கேட்டதும் இன்று காலையில் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி உபராஷ்டிரபதிதிரு. பாதக் மற்றும் மந்திரிகளும் ஆஸ்பத்திரிக்கு விரைந்து சென்று பார்த்தார்கள்.

திரு மேனன் மறைவு குறித்து திரு. நிஜலிங்கப்பா தலைமையிலான காங்கிரஸ் கடசிக் காரியக்கமிடடி கவலை தெரிவித்திருக்கின்றது

மேனனின் இறுதிச்சடங்குகள் இன்றுமாலை நடைபெறும் என இன்றுகாலை அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்விதம் நடைபெறவில்லை. இவரின் புதல்வர்கள் மரணச்சடங்கில் பங்குபற்றுவதற்கு வருவதில் ஏற்பட்ட தாமதமே இதற்குக்காரண மாகும். இவர்கள் பம்பாயிலிருந்தும், திருவனந்தபுரத்திலிருந்தும் இங்கு வருவதில் தாமதம் ஏற்பட்டது.

நாளை 24ம் திகதி காலை 9மணிக்கு சகல அரசாங்க மரியாதைகளுடனும் திரு. மேனனின் இறுதித் சடங்குகள் நடைபெறும்.

### கிரி அனுதாபம்

உதக மண்டலத்தில் தற்போது இருக்கும் ஜனதிபதி வி.வி. கிரி திரு மேனனின் திடீர் மறைவைக் கேட்டு அதிர்ச்சியுற்றதாக அவர் அனுப்பி வைத்துள்ள அனுதாபச் செய்தியில்குறிப்பிட்டுள்ளார்.


★ தமிழ் இனத்திற்கு அழைப்பு! ★

உடுவில் தொகுதி சமசமாஜக்கட்சி வேட்பாளர்

★ தோழர் வை. காராளசிங்கம் அவர்களை ★

ஆதரித்து

25-5-70 திங்கள் மாலை 6 மணிக்கு சுன்னுகம் சந்தை மைதானத்தில்

உடுவில் வாக்காளரின்



★ மாபெரும் தேர்தல் கூட்டம் ★

தலைவர்: திரு. C. சுப்பிரமணியம்

(இளைப்பாறிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர்)

பேச்சாளர்கள்:

தோழர். வ. பொன்னம்பலம்

" நெவில் பெரேரா

[1965-ம் ஆண்டில் சர்வகலாசாலையில் நடைபெற்ற மாணவர் போராட்டத்தின் தலைவர்]

" பொன். நாகலிங்கம்

மற்றும்பலர்

தமிழ்இனத்தின் எதிர்காலத்தில் அக்கறைகொண்டோர்

★ அனைவரும் திரண்டு வருக! ★



## அறிவித்தல்

இம்மாதம் 17-ம் திகதி இரவு கொடிகாமத்திலிருந்து துன்னுலை தெற்கிற்குக் காரில் வரும் வழியில் பொறியியல் முதல் வருடக் குறிப்புகள், பவுண்டன் பேனு, உடுப்புகள் ஆகியன கொண்ட ஒரு பெட்டி தவறிவிட்டது. இதைஎடுத்தவர்கள்எம்மிடம் ஒப்படைத்தால் நியாயமான அளவு சன்மானம்கொடுக்கப்படும்

தம்பிப்பிள்ளை தங்கவேலு
கோயிற் சந்தை,
துன்னுலை தெற்கு,
கரவெட்டி. 2279



## தமிழ்ப்பேசும் மக்களே திரண்டு வாரீர்!

காங்கேசன்துறை தொகுதி வேட்பாளர் ஈழத்தமிழினத்தின்

ஏகத்தலைவர், தமிழரசுத்தந்தை

உயர்திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் கியூ. ஸி.

அவர்களை ஆதரித்து

இன்று (24-5-70) ஞாயிற்றுக்கிழமை பி. ப. 6-30 மணியளவில்

திரு. செ. த. குழந்தைவடிவேல் அவர்கள் தலைமையில்

தெல்லிப்பழை அம்பனைச் சந்திக்கு அருகாமையில்

அமைக்கப்பெற்ற வன்னியசிங்கம் அரங்கில்



மாபெரும் பொதுக்கூட்டம்

நடைபெறும்

பிரதம பேச்சாளர்களாக அமிர்தலிங்கம், பகீரதன்

கலந்து கொள்ளுகிறார்கள்.

நாடகமும் நடைபெறும்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

2278 தெல்லிப்பழை 11-ம், 17-ம் வட்டார தமிழரசு ஆதரவாளர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேட்பாளர் அறிமுகம்

## மூதூர்

**ஜனாப் எம் ஈ ஏச் முகமதலி**
(ஐ. தே. க)

இரட்டை அங்கத்தவர் தொகுதியான மூதூரின் முன்னாள் ஆட்சிமன்ற உறுப்பினருள் ஒருவரே ஜனாப் முகமதலி.

தற்போது ஐ. தே. கட்சியின் வேட்பாளராகப் போட்டியிடும் ஜனாப் முகமதலி 1947ம் ஆண்டில் கம்யூனிஸ்ட் கட்சியினராக அரசியலில் பிரவேசித்தவர்.

மூதூர்த் தொகுதியில் 1952ம் ஆண்டிலும் 1956ம் ஆண்டிலும் ஆட்சிமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டவர். 1960ம் ஆண்டு தேர்தலில் இவர் ஐ. தே. க. வேட்பாளராகப் போட்டியிட்டு 2வது ஆட்சிமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். ஆனால் 1960 யூலைமாதம் நடைபெற்ற தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளரான ஜனாப். ஏ. எல்.ஏ.மஜீத்தினால் தோற்கடிக்கப்பட்டார்.

இந்த இரட்டை அங்கத்தவர் தொகுதியில் 1வது ஆட்சிமன்ற உறுப்பினராக விளங்கிய திரு. ரி. ஏகாம்பரம் 1961ம் ஆண்டு மறைந்தபின் முதலாவது அங்கத்தவராக நடைபெற்ற இடைத்தேர்தலில் ஜனாப் அலி இலங்கைத் தமிழரசுக்கட்சியில் இணைந்து அதன் வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றிபெற்றார்.

1965ம் ஆண்டுத் தேர்தலிலும் ஜனாப் முகமதலி இலங்கைத் தமிழரசுக் கட்சி வேட்பாளராகவே போட்டியிடார். 1வது ஸ்தானத்தைப் பெற்றார்.

சனங்களிடத்திலே செல்வாக்குப்பெற்ற ஜனாப் முகமதலி ஆயுர்வேத வைத்தியாராவர். இவர் வெளிநாடுகளில் நடைபெற்ற பல்வேறு கருத்தரங்குகளிலே இலங்கைப் பிரதிநிதியாகக் கலந்து கொள்ளச் சென்றுள்ளார்.

0 0 0

**ஜனாப் ஏ எல் ஏ மஜீத்**
(ஸ்ரீல. சு. கட்சி)

ஜனாப் மஜீத் நல்ல தமிழ் ஞானம் மிக்கவர். இலக்கியம், கலைகள் பற்றிய நாட்டம் மிகவுடையவர். தமிழ்க் கலைஞர்களையும் எழுத்தாளர்களையும் பாராட்டும் பண்பு மிக்கவர்.

திருகோணமலை இந்துக் கல்லூரியில் ஆரம்பக்கல்வி பெற்றபின்னர் சென்னை சென்று பட்டதாரியானவர்.

கிண்ணியாமகாவித்தியாலயத்தின் அதிபராக இருந்து நல்ல தமிழ்த் தொண்டும் கல்வித்தொண்டும் ஆற்றிவந்தவர்.

மேடையில் அழகாப்பேசக் கூடியவர். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்தவரானாலும் நல்ல தமிழபிமானம் மிக்கவர். இலக்கியம், கலைகள் பற்றிஆதாரபூர்வமான முறையில் அழகு தமிழிற் பேசக் கூடியவர்.

தொகுதியில் மாத்திரமன்றி தொகுதிக்குவெளியேயுள்ளவர்களுடனும் மனம் விட்டுப் பழகுகின்றவர்.

1968ம் ஆண்டில் ஜூலை மாதம் இவர் முதன்முதலாக சுயேச்சை வேட்பாளராகத் தேர்தலில் போட்டியிட்டார்

இத்தேர்தலில் தோல்வியடைந்தார். ஆனால் அதே வருடம் ஜூலை மாதம் நடைபெற்ற தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்டு 2 வது அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டார். 1965ம் ஆண்டுத்தேர்தலிலும் இவர் 2வது அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இவர் கிண்ணியாபட்டின சபை உறுப்பினராகவும் [illegible]

**திரு ஏ தங்கத்துரை**
(தமிழரசுக்கடசி)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொள்கைகளில் உறுதியான பற்றும் ஈடுபாடும் மிகவுடைய திரு தங்கத்துரை முதன்முதலாக இப்போதுதான் ஆட்சிமன்ற தேர்தலில் கலந்து கொள்ளுகின்றார்.

32 வயதுடையவரான திரு. தங்கத்துரை தமிழரசுக்கட்சியின் வாலிபமுன்னணி இயக்கத்தின் முக்கியஸ்தர்களுள் ஒருவராக விளங்குபவர். இதனால் அண்மையில் வாலிப முன்னணியின் தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். தமிரசுக் கட்சியின் வேட்பாளர்களுக்குள் ஆண்டில் குறைந்தவர் இவரே.

மூதூரைச் சேர்ந்த கிளிவெட்டியைத் தாயகமாகக் கொண்ட திரு. தங்கத்துரை சொந்த ஊரிலேயே முதலில் கற்று அரசாங்க சேவையில் இணைந்தவர் 13 வருட காலம் அரசாங்கசேவையில் ஈடுபட்டிருந்த இவர் தேர்தலுக்காக அரசாங்க உத்தியோகத்தைத்துறந்துள்ளார்

இளம் வயதிலிருந்தேசன சமூகப் பணியில் அக்கறையுடன் கலந்துகொள்பவர். உண்மை வேட்கையும்மொழியுணர்ச்சியும் மிக்கவர்.

0 0 0

# 'ஒற்றை ஆட்சியா சமஷ்டியா வேண்டும்?'

கோப்பாய், ஞாயிறு

''தற்பொழுது நடைபெறும் தேர்தல் போராட்டத்தின் அடிப்படை ஒற்றையாட்சியா, சமஷ்டியா? என்பதேயாகும். இப்போராட்டத்தில் நல்ல தீர்ப்பைச் சரியான முறையில் வழங்குவது பொதுமக்களாகிய உங்களது கடமையாகும்''

இவ்வாறு நேற்று மாலை கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சனசமூகநிலையத்திற்கு அருகாமையில் நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் பேசுகையில் நல்லூர்த் தொகுதி வேட்பாளர் டாக்டர் இ. மு. வி. நாகநாதன் கூறினார்.

அட்வகேட் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

திரு நாகநாதன் தொடர்ந்து பேசுகையில் ''1948ம் ஆண்டு பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து, இலங்கை சுதந்திரம் அடைந்த காலம்முதல் தமிழரசுக் கட்சியினரால் ஒற்றையாட்சிக்கு எதிராக ஆரம்பித்த இப்போராட்டம் தொடர்ந்து நடைபெறுகிறது; இந்நாட்டில் ஒற்றையாட்சியின் கீழ் எந்தவொரு தமிழனும் சுயமரியாதையுடன், உரிமைகளுடன், தமிழ்க்கலைகலாசாரத்துடன் சுதந்திரமாக வாழமுடியாதென்பதே எமது கட்சியின் நிரந்தரக் கொள்கையாகும்: இதனையுணர்ந்து செயலாற்றத் தமிழ்ப் பெருமக்கள் முன்வருவது அவசியம்'' என்றார்:

சாவகச்சேரி அபேட்சகர் திரு: வ. நவரத்தினம், கோப்பாய் அபேட்சகர் திரு. சி. கதிரவேலுப்பிள்ளை, ஹென்றி, காளிதாசப் புலவர் உட்படப் பலர் பேசினர்.

## இன்றைய பலன்

வைகாசி மீ 10-ம் திகதி
[24-5-70]

**மேஷம்-** குடும்பத்தில் அமைதியான சூழ்நிலை தென்படும். பிரம்மச்சாரிகளின் வாழ்வில் காதல் அரும்பும். நல்லநாள்.

**ரிஷபம்-** நண்பர்கள் தொல்லையாலே நலிவுகள் தோன்றக்கூடும், பண்புகள் பறந்துபோகும்; பரதசிக் கோலமாகும்.

**மிதுனம்-** இதமான வாழ்வு இன்சொல் பெரியோர்கள் ஆதரவு இத்தனையும் இன்று தப்பாமல் கிட்டும். இறைபக்தி மேலோங்கும்.


**கடகம்-** உத்தியோகத்தில் உயர்வுடன் உரிமையும் கிடைக்கும். உற்சாகமாகக் கடமையாற்றுவீர்கள். உவகை சேரும்.

**சிம்மம்-** நீண்டநாள் சடன் இன்று நிவர்த்தியாகும். பிணி அகலும். உங்கள் உதவிக்குப் புத்திரர் விரைவர். சிறப்புமுண்டு.

**கன்னி-** குறுக்குவழி[illegible] குவதால் சட்டத்தின் பிடியில் மாட்டிக்கொள்ளக்

# 'சிறுபான்மைத் தமிழரை சிங்கள பௌத்தராக மாற்றும் சதிதிட்டம்!'

## செனட்டர் திருச்செல்வம் எச்சரிக்கை



புத்தூர், சனி

''நமது தமிழ் இனத்தவர்களுக்கிடையே இருந்துவரும் சிறுபான்மைத் தமிழர் பெரும்பான்மைத் தமிழர் என்ற சாதிக்கொடுமையால் 100க்கு 30 சதவிகிதமான சிறுபான்மைத் தமிழரை சிங்கள பௌத்தர்களாகமாற்றும் சதித்திட்டம் இன்றுநடந்துவருகிறது. இதில் நாங்கள் விழிப்புணர்ச்சியுடன் இருக்கவேண்டும்.''

இவ்வாறு முன்னாள் உள்ளூராட்சி மந்திரியும், செனட்டருமான திரு. மு. திருச்செல்வம் பேசுகையில் குறிப்பிட்டார்

நவக்கிரி எல்லாளன் சனசமூக நிலையத்துக்கு அருகாமையில் நவக்கிரி தமிழரசுக் கட்சிக்கிளையின் ஆதரவில் திரு. இ. செல்லத்துரை தலைமையில் கோப்பாய்த் தொகுதி வேட்பாளர் திரு. சி. கதிரவேலுப்பிள்ளையை ஆதரித்து நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. மு. திருச்செல்வம் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

தென்இலங்கையில் ஆங்கிலேயருடைய ஆட்சிக்காலத்தில் கறுவாத்தோட்டங்களில் வேலைசெய்வதற்காக சில தமிழ்மக்கள் ஒருபகுதியில் குடியேறினார்கள் அவர்கள் இன்று சிங்களவர்களாக மாறி சிங்களத் தொகுதியாகிவிட்டது. அதுபோலவே வடக்குமாகாணத்திலும் சிறுபான்மையினரான 30 சத விகிதத்தினரும் சிங்கள பௌத்தர்களாக மாறினால் ஒரு காலத்தில் சிங்களத்தொகுதியாகிவிடும். எனவே இதில் நாங்கள் விழிப்புணர்ச்சியுடன் இருந்து சிறுபான்மைத் தமிழர் பெரும்பான்மைத் தமிழர் என்ற பாகுபாடின்றி எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் என்ற ரீதியில் ஒரே [illegible] உரிமை [illegible] சிறுபான்மை இனமக்களும் பெரும்பான்மை இனமக்களும்

போது திரு. பொன்னம்பலம் கிண்டல்செய்து இனவெறியர்களுக்கு எம்மைக் காட்டிக் கொடுத்தார். இதன்பின்பும் அவரை நீங்கள் ஆதரித்தால் நீங்கள் தமிழினத்திற்குச்செய்த துரோகம் ஆகும்'' என்றார்.

புலவர் காளிதாசன். திரு. ஆ. நவரத்தினம், திரு. சு சின்னத்துரை, திரு. க. திரவியம் ஆகியோருட்பட மற்றும் பலர் பேசினர்.

# 'தேர்தலின் பின் தமிழரசு யாருக்கு ஆதரவு அளிக்கும்?'

சுழிபுரம், ஞாயிறு

''தமிழ்இனத்தின் விடுதலை இயக்கமே இலங்கை தமிழரசுக்கட்சியாகும். வரும் பொதுத் தேர்தலில் தமிழரசுக்கட்சியினர்வடக்குகிழக்கு மாகாணங்களிலுள்ள அதிக தொகுதிகளில் வெற்றி பெறுவர் என்பது உறுதியாகும். தேர்தலின் பின்னர் எக்கட்சியினர் எமது கோரிக்கைக்கு ஆதரவுதர முன்வருகின்றனரோ அவர்களுக்கு ஆதரவையும் அல்லது நிபந்தனையோடு கூடிய ஆதரவையும்கொடுப்போம்.''

இவ்வாறு சுழிபுரம் கிழக்கில் வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழரசுக் கட்சி வேட்பாளர் திரு. அ. அமிர்தலிங்கத்தை ஆதரித்து நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய முன்னாள் உள்ளூராட்சி அமைச்சர் செனட்டர் மு. திருச்செல்வம் குறிப்பிட்டார்.

சுழிபுரம் கிராம சபை உபதலைவர் திரு அ. நன்னித்தம்பி கூட்டத்துக்கு தலைமை வகித்தார்.

திரு. மு. திருச்செல்வம் மேலும் பேசுகையில், வட்டுக்கோட்டைத்தொகுதியில் போட்டியிடும் திரு. அ. அமிர்தலிங்கம் வெற்றியை தென்இலங்கை வாழ் மக்கள் அதிக கவனமாக கவனித்துக் கொண்டு இருக்கின்றனர். அமிர்தலிங்கத்தின் துணிவும் அரசியல் ஞானமும், வாதத்திறமையுமே கவனத்துக்கு உரிய காரணமாகும். இன்று இலங்கையிலுள்ள பெரும் தலைவர்களுடன் திறமையாக வாதிடவும் விவேகமான அரசியல் கருத்துக்களை கூறவும் ஆற்றல் உடையவர் திரு. அ. அமிர்தலிங்கம் என்றார்.

கிளிநொச்சித் தொகுதி வேட்பாளர் திரு. மு. ஆலாலசுந்தரம் பேசுகையில்,

பொய்ப் பிரசாரங்கள் மூலம் தமிழ் மக்களை மீண்டும், மீண்டும் ஏமாற்றலாம் என எண்ணியும், தமிழ்அரசுக் கட்சியினரை திட்டித்தீர்ப்பதன் மூலம் ஆதரவைபெற்றுக் கொள்ளலாம் எனவும் தமிழ்க்காங்கிரசினர் கனவு காண்கின்றனர். தமிழ் மக்களை வழி நடத்த தேர்தல் காலத்தில் மட்டும் தலைகாட்டும் தமிழ்க் காங்கிரஸ் கட்சியினர், தமிழ் மக்கள் விடுதலை பெற பல்வகையான போராட்டங்களை நடாத்தி தமிழ்மக்கள் விடுதலைக்காக உழைக்கும் தமிழ் அரசுக்கட்சி ஒன்று இருப்பதை மறந்துவிட்டார்கள் போலும். கட்சியின் தலைவர்களாக விளங்குபவர்கள் தமது வாழ்வை தமிழ் மக்கள் பணிக்காக தியாகம் செய்துள்ளதை யாவரும் அறிவர்'' என்றார்.

திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம், மா. பொன்னுச்சாமி, பண்டிதர் ப. இராசகுரு, மு கணபதிப்பிள்ளை, காரைநகர் வை. சர்மா, எஸ். சுந்தரம்பிள்ளை, திரு. அ அமிர்தலிங்கம் உட்பட மற்றும் பலர் பேசினர்.

# பொருளாதார விமோசனப் பாதையே சோஷலிசம்'

உடுப்பிட்டி, ஞாயிறு

''ஆர்: ஜீ. சேனநாயக்காவுக்கு எதிராக டட்லி ஆள் போடவில்லை. ஏனென்றால் அவர்களுக்கிடையில் வர்க்க நலன் அதிகமென்ற காரணமேயாகும். ஆர். ஜீக்குத் திருமலையில் வெங்காயத் தோட்டம் கொடுத்தது, திருச்செல்வம் அமைச்சராக இருந்த டட்லி அரசாங்கம் தான்.''

இவ்வாறு காங்கேசன்துறை கம்யூனிஸ்ட் வேட்பாளர் திரு. வி. பொன்னம்பலம் உடுப்பிட்டியில் கம்யூனிஸ்ட் வேட்பாளராகப் போட்டியிடும் திரு. பொன். குமாரசாமியை ஆதரித்து நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் சொன்னார்.

இக்கூட்டம் கரணவாய் தெற்கு சோளங்கன் மகாவித்தியாலயத்திற்கு அருகாமையிலுள்ள மைதானத்தில் திரு. வி. சிவகுருநாதன் தலைமையில் நடைபெற்றது.

திரு. வி. பொன்னம்பலம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''பண்டா ஆட்சியில் தமிழருக்குத் துன்பம் வரும் என்று பீதிகாட்டி வகுப்புவாதத்தால் முன்னேறிய யு. என். பி. பதவி கிடைத்ததும் இனி ஏன் வகுப்புவாதம் பேசப்போகின்றது? உலக நாடுகளில் வெவ்வேறு கலாச்சாரப் பின்னணியைக் கொண்ட மக்கள் சோஷலிச அமைப்பில் வாழ்ந்துவருகின்றனர்.

இலங்கையில் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் பலம்போதாது. இதனாலேயே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடனும், சமசமாஜக் கட்சியுடனும் கூட்டுச் சேர்ந்துள்ளோம் இம்மூன்று கட்சிகளுக்கும் பொதுவாக இயற்றப்பட்ட கூட்டணித் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வரவும், தமிழ்-சிங்கள மக்களை ஒன்றுபடுத்தவும் பாடுபடுவோம்; வடக்கு, கிழக்கு தென் மாகாணங்களில் 3 பல்கலைக்கழகங்கள் நிறுவுவது எமது முக்கிய திட்டம்

நிதானமான நிதிக் கொள்கையைச், சரியான பொருளாதாரத் திட்டங்களை மேற்கொண்டால் நாடு முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைக்கமுடியும். பொருளாதார விமோசனப் பாதை என்பதே சோஷலிசம் என்பதாகும்.

திருவாளர்கள் எம். வி. சுப்பிரமணியம், அட்வகேட் எஸ். ஜெயசிங்கம், நடராசா, டொமினிக் ஜீவா, உடுப்பிட்டி கம்யூனிஸ்ட் வேட்பாளர் திரு. பொன். குமாரசாமி ஆகியோரும் பேசினர்.

## தவறிவிட்டது

தினக்குறிப்பு, இன்சூரன்ஸ் கடிதங்கள் கூப்பன் ஆகியன அடங்கிய ப்ார்சல் ஒன்று நுணாவிலுக்கும் நல்லூருக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் S. S. கந்தசாமி பொறுப்பதிகாரி. நெசவு நிலையம் கலவயல் என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். 2252

## வரி விளம்பரம்

**விற்பனைக்கு**

புளியடிக் கடைத் தெரு அருகாமையில் ஐந்து பரப்பு வளவும் வீடும் மிக நல்ல தண்ணீர்க்கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். R. P. செல்வத்துரை, ''இந்திர வாசா'' சித்தன்கேணி. 2251

வியாபாரம்பெருக விளம்பரம் செய்க.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

அருகாமையில் ஐந்து பரப்பு வளவும் வீடும் மிக நல்ல தண்ணீர்க்கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். R. P. செல்வத்துரை, "இந்திர வாசா" சித்தன்கேணி. 2251

1965ம் ஆண்டுத்தேர்தலிலும் இவர் 2வது அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டார்.


இவர் கிண்ணியாபட்டின சபை உறுப்பினராகவும் கடமையாற்றுகிருர்.


வின்ஸர் 7 வது வாரம் தினசரிபி.ப.2-30 6-30
யாழ்ப்பாணம் சிவாஜிகணேசன் — பாரதி
மற்றும் பலர் நடித்த
# தங்கச் சுரங்கம்
(முழுநீள ஸ்டன கலர் சித்திரம்)
தினசரி: காலை 10-30 இரவு 9-45
ரி. ஆர். ராமச்சந்திரன்—தங்கவேலு
அஞ்சலிதேவி — கருணாநிதி
நடித்த
# அடுத்தவீட்டுப் பெண்

# வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிரிப்போயா காலை 10-30)
கே. எஸ். கோபாலகிருஷ்ணனின்
மற்றுமோர் வெற்றிச் சித்திரம்
★ நம்பியார் மாறுபட்ட புதுப் பாத்திரமேற்று நடித்து மக்களின் உள்ளத்தைக் கவர்ந்த சித்திரம்



கிருஷ்ணகுமாரி
புஷ்பலதா
நாகேஷ்
முத்துராமன்
வி. கே-ராமசாமி
சுண்ணன்
மற்றும் பலர்
நடித்த



# சுப தினம்
டைரக்ஷன்: ஸ்ரீகாந்த்


இளம் வயதிலிருந்தேசன சமூகப் பணியில் அக்கறையுடன் கலந்துகொள்பவர். உழைமை வேட்கையும்மொழியுணர்ச்சியும் மிக்கவர்.

0 0 0

**எச் டி எல் லீலாரத்ன**
(சுயேச்சை)

சுயேச்சையாளராகப் போட்டியிடும் திரு லீலாரத்ன சமூகப்பணிபுரிவதில் அக்கறையுள்ளவர்.

இவர் தொழில் நுட்பஅதிகாரியாகவிருந்து ஒய்வு பெற்றவர்.


## ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30-10-00 மணி
போயா, பிரிபோயா 2-30
நாகேஷ்வரராவ்-சாவித்திரி
நடித்த
# எங்க வீட்டு மகாலட்சுமி

## வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30,10-00
பிரிபோயா,போயா 2-30மணி
ரங்கராவ் - மாஸ்டர் பிரபாகன்
நடித்த
# பக்த பிரகலதா

## ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 10-00
சுனில்டட்-சரோஜாதேவி
நடித்த
# பேற்றி பேற்றி
PETI PETE
(ஹிந்தி)

## ராணி [யாழ்ப்பாணம்]
Daily 4-45 7 9-45 p.m.
Nontgomery Wood
in
SONS OF SATAN

## MANOHARA, JAFFNA
Daily 4-45, 7&9-45 p.m
Poya&Public Holidays
4 shows
Mike Henry,
Jane Murray
in
TARZAN AND THE GREAT RIVER
(Scope-color)

## REGAL JAFFNA
Daily 4 Shows
PILGRIMAGE TO MECCA
மெக்கா யாத்திரை
colour)


இன்று நிவர்த்தியாகும். பிணி அகலும். உங்கள் உதவிக்குப் புத்திரர் விரைவர். சிறப்புமுண்டு.

**கன்னி**- குறுக்குவழி இறங்குவதால் சட்டத்தின் பிடியில் மாட்டிக்கொள்ளக் கூடும். திரைமறைவில் உங்கள் நடவடிக்கைகள் கண்காணிக்கப்படும்.

**துலாம்**- ஒளிப் பரப்பும் வாழ்க்கை உறவினர்கள் மத்தியில் ஒற்றுமை மலரும். எதிர்பார்த்ததைவிட அதிகம் கிடைக்கலாம். பொன்னுன தினம்.

**விருச்சிகம்**- நிதியில் அபிவிருத்தியுடன் நிம்மதி பிறக்கும். பந்துக்கள் கொண்டாட்டமும் விருந்துமுண்டு.

**தனுசு**- குடும்பத்தில் சிறிய பூசல் தலைதூக்கும். பெரியவர் ஒருவருடன் அபிப்பிராயபேதம் தோன்றக் கூடும். அமைதியுடன் இருக்கவும்.

**மகரம்**- இன்று சுவைதரும் நிகழ்ச்சிகள் இடம்பெறும். வெளியிடத்திலிருந்து வியப்பூட்டும் செய்தியொன்று கிடைக்கலாம். சுகபோக நாள்.

**கும்பம்**- நேர்முகபபரீட்சைக்கு உகந்ததினம். தெய்வத்தின் அருள் தாராளமாகக் கிடைக்கும்.

**மீனம்**- மற்றவர்களின் இன்னல்கள் கண்டு இரக்கம் காட்டுவீர்கள். தாராள குணத்தின் மூலம் தனமும் செலவாகும். புண்ணிய யாத்திரையுண்டு.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
### ஞாயிறு 24—5—70

**344 மீ. அன்ட் 61 மீ.**

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவு 8-15 இஸ்லாமிய கீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ. அன்ட் 49 மீ.**

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 சித்திரகானம், 1-00 மாதர் கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ. அன்ட் 61 மீ.**

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 சங்கமம் 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-30 சிறுவர் விருந்து

இரவு 6-10 முத்திநெறி, 6-30 கிராம சஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கிராம சஞ்சிகை, 7-15 சித்திரம், 7-45 வாத்திய இசை, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 நாதஸ்வரம், 10-30 செய்திச்சுருக்கம்.

தமிழர் என்ற பாகுபாடின்றி எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் என்ற ரீதியில் ஒரே குடையின்கீழ்நின்று உரிமைகளைப்பெற சிறுபான்மை இனமக்களும் பெரும்பான்மை இனமக்களும் ஒன்றுசேர்ந்து வாழவேண்டும் என்ருர்.

கோப்பாய்த்தொகுதி வேட்பாளர் திரு. சி. கதிரவேலுப்பிள்ளை பேசுகையில் கூறியதாவது:

எதற்காக, எந்தக்கொள்கைக்காக, எந்த லட்சியத்திற்காக, எந்த அடிப்படை உரிமைக்காக உங்கள் வாக்குகளை அளிப்பது என்பதை நன்ருகச் சிந்தித்த பின்னரே நீங்கள் உங்கள் வாக்குரிமைகளை அளிக்கவேண்டும். இடமாற்றம் பெறுதற்கோ அல்லது உத்தியோகம் எடுப்பதற்கோ உங்கள் வாக்குகளைச்செலுத்தாதீர்கள். நீங்கள் ஒரு நீதிபதி வழக்கை நடத்துவதுபோல நன்ருக விசாரணைசெய்து எந்தக் கட்சி செய்ததுசரி எந்தக் கட்சி செய்ததுபிழை என்று உணர்ந்து உங்கள் வாக்குக்களை செலுத்தவேண்டும்.

தமிழ்க்காங்கிரஸ்கட்சி ஐக்கியதேசியக்கட்சியுடன் மீளா அடிமைகளாகச் சேர்ந்து தான் உரிமைகளைப் பெறலாம் என்று கூறுகிறது. ஆனல் நாங்கள் எந்தக்கட்சி ஆட்சிக்கு வந்தாலும் எங்களுடைய உரிமைகளை எந்தக்கட்சி தருகிறதோ அவர்களுடன் சேருவோம் என்று கூறுகிருேம்.

ஒன்றரை மந்திரிப் பதவிக்காக பாதி நிலத்தை விற்ருர்கள், பாதி இனத்தை விற்ருர்கள். ஆனல் நாங்கள் பதவிகளைக் கொடுத்தோம் உரிமைகளைப்பெற்ருேம்" என்ருர்.

திரு. க. நித்தியானந்தன் பேசுகையில், மட்டக்களப்பு தமிழன், திருகோணமலைத் தமிழன், மலைநாட்டுத் தமிழன் சிறுபான்மைத் தமிழன் என காங்கிரசார் பிரித்துவைத்த தமிழ் இனத்தை, தமிழரசார் ஒரேகுடைக்குக்கீழ்கொண்டு வந்தார்கள். காலிமுகக்கடற் கரையிலே சிங்கள இன வெறியர்களாலும், காடையர்களாலும் தாக்கப்பட்ட

லிங்கம் என்ருர்.

கிளிநொச்சித் தொகுதி வேட்பாளர் திரு. மு. ஆலாலசுந்தரம் பேசுகையில்,

வாதம் பேசப்போகின்றது? உலக நாடுகளில் வெவ்வேறு கலாச்சாரப் பின்னணியைக் கொண்ட மக்கள் சோஷலிச


வியாபாரம்பெருக
விளம்பரம் செய்க

# உங்கள் எதிர்காலத்தை உருவாக்கும் கரங்கள்


இலங்கையில் ஏற்றுமதி வருவாயை அதிகரிப்பதற்கு உதவும் திறமை வாய்ந்த கரங்கள்! தேசிய இனத்தை உருவாக்கும் பணிக்கு தன்னையே அர்ப்பணித்த ஒரு கலைஞனின் கரங்கள்

இவரைப்போல ஆயிரக்கணக்கானவர்கள் இலங்கை எங்கிலும் தங்கள் திறமையை அயராது உழைத்து உலகின் பல்வேறு பகுதிகளிலும் உபயோகித்து விரும்பப்படுகின்ற, விலை மதிப்பற்ற கைப்பணிப் பொருட்களை உருவாக்குகின்றன!

இலங்கையின் எதிர்காலத்தை......பெருமைதரும் வேலைப்பாட்டை உருவாக்குவதற்கு உதவுவது இக்கரங்களே.

இப்பெருமுயற்சியில் இலங்கையின் சுதேசிய தயாரிப்பான "ரவி" பெயிண்ட் பிரஷ்கள் இந்நாட்டிலே ஓர் முக்கிய பாகத்தை ஏற்றுள்ளன.

வேலைப்பாட்டை சிறப்பிக்க இந்நாட்டு கைவேலைக் கலைஞர் இந்த உயர்தர ரவி பிரஷ்களிலேயே நம்பிக்கை கொண்டுள்ளனர்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பாடசாலை பஸ் மீது கொமாண்டோ தாக்குதல்

# 8 பள்ளிப் பிள்ளைகளுடன் 11 இஸ்ரேலியர் பலி

## 20 லெபனுன் பிரஜைகளை யூதர்கள் பதிலுக்குக்கொன்றனர்

பேரூட், மே 23

மேற்காஸியாவில் மீண்டும் நிலைமை படுமோசமாக மாறிக்கொண்டிருக்கின்றது. நேற்று அரபுக்கொமாண்டோக்கள் இஸ்ரேலிய பாடசாலை பஸ் ஒன்றின்மீது நடத்திய தாக்குதல் ஒன்றைத்தொடர்ந்து இஸ்ரேலியர் லெபனுன் கிராமங்கள் பலவற்றின்மீது குண்டுமாரி பொழிந்து பழிவாங்கியிருக்கிறார்கள்.

இஸ்ரேலிய பள்ளிக்கூட பஸ்வண்டியொன்றை லெபனுனிலுள்ள அரபுக்கொரில்லாக்கள் ஒளித்திருந்து வழிமறித்து தாக்கினார்களாம். இதில் எட்டு குழந்தைகள் உடபட 11 பேர் பலியானார்கள்.

இந்தச் சம்பவம் நடைபெற்று சில மணி நேரத்தில் இஸ்ரேலியர் நான்கு லெபனுன் கிராமங்கள்மீது குண்டுமாரி பொழிந்தார்கள் இதில் 20 பேர் பலினார்கள் ஏராளமானவர்கள் காயமடைந்தார்கள்.

பள்ளிக்கூட பஸ்வண்டி தாக்கப்பட்ட இடத்தில் நடைபெற்ற ஓர் இரங்கல் கூட்டத்தில் இஸரேலிய தலைவர்கள் பேசுகையில் பழிக்குப்பழிவாங்குவோம் என்று அறைகூவினார்கள். இதைத் தொடர்ந்தே லெபனுன்கிராமங்கள் மீது இஸ்ரேலிய தாக்குதல் நடைபெற்றது.

இஸ்ரேலிய பஸ் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கு தாங்களே காரணம் என்று பாலஸ்தீன அரபுக் கொமாண்டோ ஸ்தாபனம் ஒன்று பெருமைகொண்டாடியது. சிலவாரங்களுக்கு முன் ஐக்கிய அரபுக்குடியரசு பாடசாலையொன்றின் மீது இஸ்ரேலியர் நடத்திய தாக்குதல் ஒன்றுக்கு பதில் நடவடிக்கையாகவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக அந்த ஸ்தாபனம் அறிவித்தது. ஆனல் கொரில்லாஸ் தாபனங்களுக்கெல்லாம் பொறுப்பாகவுள்ள ஒரு கொமாண்டோ தலைமைப் பீடம் விடுத்துள்ள ஓர் அறிக்கையில் இந்தச் சம்பவம் தற்செயலாக ஏற்பட்ட தொன்று என்று அறிவித்திருக்கின்றது.

இந்த இருதாக்குதல்கள் பற்றியும் இஸ்ரேலும் லெபனுனும் ஐ நா. பாதுகாப்புச் சபைக்கு புகார் செய்திருக்கிறார்கள்.

## 'தமிழினத்துக்கு எதையுமே பெற்றுக்கொடுக்கவில்லை'

### தமிழரசு மீது தாக்கு

அராலி, சனி

''நாலம்சக் கோரிக்கையை முன்வைத்து ஆரம்பிக்கப்பட் தமிழரசுக்கட்சி ஒன்றையேனும் தமிழினத்துக்குப் பெற்றுக் கொடுக்கவில்லை. எல்லாவற்றையும் இழந்த இராவணன்போல் மேடையில் மட்டும் ஓலமிடுகிறார்கள்''

வட்டுக்கோட்டை தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகர் திரு. ஆ. தியாகராஜாவை ஆதரிக்கு முகமாக நடந்த கூட்டத்தில் பண்டிதர் சோ. இளமுருகனர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு அருகாமையில் நடந்த இக்கூட்டத்துக்கு வழக்கறிஞர் திரு. நா. ஏகாம்பரம் தலைமை

களோடு இந்திய வர்த்தகர்கள், நகை அடைவுபிடிப்பவர்கள் போன்றவர்களும் சென்றார்கள். நாடுகள் சுதந்தரமடைந்து சுயஆட்சிகள் தாபிக்கப்பட்டதும், அந்தந்த நாட்டரசுகள் அந்தந்த நாடுகளுக்கேற்ற சட்டங்களை இயற்றின இலங்கையிலும் பிரஜாஉரிமைச் சட்டம் இந்தியர் பாகிஸ்தானியர் பிரஜா உரிமைச்சட்டம் உருவாகின. முன்னைய சட்டத்தை திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் எதிர்த்தார். பின்னையதை ஆதரித்தார். இதில்ஒரு தவறுமில்லை ஆனல் சமசமாஜக்கட்சியினருடன் திரு தொண்டமான் கட்சியும் தீர்க்க தரிசிகளில்லாத தமிழரசுக்கட்சியும், இந்திய வம்சாவழியினரை

### பிரான்ஸ் மீண்டும் அணுசோதனை

பாரிஸ், மே. 23

பிரான்ஸ் தனது இப்போதைய அணுகுண்டு சோதனைத் தொடரின் இரண்டாவது சோதனையை நடத்தியிருக்கின்றது. இக்குண்டு பலூன் ஒன்றின் மூலம் கடலேரி ஒன்றில் வெடிக்க வைத்து சோதிக்கப்பட்டதாம்.

பிரான்ஸ் அணுகுண்டுச் சோதனைகள் நடத்தியிருக்கும் அதேவேளையில் மேற்கொண்டும் புதிய அணு ஆயுதப் பரிசோதனைகளை நடத்தவேண்டாம் என்று ஐ. நா. தலைமைச் செயலாளர் யுதாண்ட் சோவியத் யூனியனையும், அமெரிக்காவையும் கேட்டிருக்கிறார்.

— —

### ஜெகஜீவன்ராமுக்கு கோட்டு உத்தரவு

புதுடில்லி, மே. 23

காளை மாட்டுச் சின்னம் பற்றி ஏற்பட்டுள்ள தகராற்றை ஆராயும் தேர்தல் கமிஷன் நடாத்தும் விசாரணை செல்லாது என அறிவிக்கும்படி சிண்டிக்கேட் காங்கிரஸ் தலைவர் நிஜலிங்கப்பா நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ரிட் மனுவில் கோரியிருந்தார்.

இவர் தனதுமனுவில் இவ்விசாரணையை தடுத்துவைக்க இடைக்கால உத்தரவு பிறப்பிக்குமாறு மேலும் கோரியிருந்தார்.

மேற்படி மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிபதிகள் என். அன்ட்லி, வி. தாத்தர்ச்சாரி ஆகியோர் ஜெகஜீவன்ராம். சங்கர் தயாள சர்மா, [illegible] மணியம் ஆகியோ[illegible] டில் ஆஜராகும்படி கட்டளை பிறப்பித்துள்ளார்கள்.

### சிறுமி பரிதாப மரணம்

கொழும்புத்துறை, சனி

அரியாலை ஆனந்தன் வடலி வீதியில் வசிக்கும் முத்துவேல் நகேஸ்வரி (வயது 10) என்னும் சிறுமி கிணற்றில் தண்ணீர் அள்ளும்போது கால் தவறி விழுந்து பரிதாப மரணமானர். சிறுமியை காணுது தேடிய தாயார் அவர் கிணற்றில் கிடப்பதைக்கண்டதாகச் சாட்சியத்தில் தெரிவிக்கப்பட்டது. நீரில் மூழ்கியதால் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

### 'நாடு ஒருபொழுதும் தன்னிறைவு காணுது'

எம்பிலிபிட்டியா, சனி

'ஐக்கியதேசியக்கட்சியின் தற்போதைய முதலாளித்துவ விவசாயக் கொள்கையின் மூலம் நாடு ஒருபொழுதும் தன்னிறைவு காண முடியாது. நாம் உணவில் தன்னிறைவு காணவேண்டுமானல் ஒவ்வொரு விவசாயியும் கவனமாகக் கவனிக்கப்பட்டு அவனுக்கு வேண்டியசகல சலுகைகளும் அளிக்கப்படவேண்டும்.''

கொலன்னுவ தொகுதியில் போட்டியிடும் திரு. பி ஒ. விமலானங்கவை ஆதரித்து உடவளவையில்நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையில்டாக்டர் என். எம். பெரேரா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. டி. ஜே. ஆர். திஸநாயகா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில் உலகின் எந்தவொருநாடும் முதலாளித்துவ அரசாங்கத்தின்கீழ் தன்னிறைவைப் பெறவில்லை தேசிய அரசாங்கம் விவசாயிகளுக்கு நன்மை செய்தேன். எனப் பொய்பிரசாரம் செய்கிறதே யொழிய உண்மையில் விவசாயிகளுக்கு ஒருவித நன்மையும் செய்யவில்லை. கடந்த ஆண்டுகளில் தேசிய அரசாங்கம் செய்த ஒரே ஒரு நன்மை தன்னைச் சார்ந்த முதலாளி வர்க்கத்தினருக்கு உழவு [illegible] கடன்களை [illegible]மையேயாகும். எனக் கூறினர்.

# தென் ஆபிரிக்க கிரிக்கட் கோஷ்டி விஜயம் ரத்து

## காமன்வெல்த் நாடுகள் வரவேற்பு

லண்டன், மே. 23

முழுவதும் வெள்ளையர்களையே கொண்ட தென்னுபிரிக்க கிரிக்கட் கோஷ்டியின் பிரிட்டன் விஜயம் ரத்து செய்யப்பட்டிருக்கின்றது.

தென்னுபிரிக்க கிரிக்கட் கோஷ்டி விஜயம் ரத்து செய்யப்பட்டதை பல காமன்வெல்த் நாடுகள் வரவேற்றிருக்கின்றன. எடின்பரோவில் நடைபெறவிருக்கும்காமன்வெல் விளையாட்டுகளில் கலந்து கொள்வதில்லை யென்று அறிவித்திருந்த இந்திய உட்படபல காமன்வெல்த் நாடுகள் தென்னுபிரிக்க கிரிக்கட் கோஷ்டியின் விஜயம் ரத்துசெய்யப்பட்டதைத் தொடர்ந்து தமது முடிவைமாற்றிக் கொண்டுள்ளன.

தென்னுபிரிக்க கிரிக்கட் கோஷ்டிக்கு விடுக்கப்பட்ட அறிக்கையை ரத்து செய்யும்படி பிரிட்டிஷ் அரசு விடுத்தகோரிக்கையை பிரிட்டிஷ் கிரிக்கட்சபை ஏற்றுக்கொண்டு விட்டது. அரசாங்கம் விடுத்தகோரிக்கைபற்றி நேற்று கிரிக்கட்சபைகூடி ஆலோசனை நடத்தியது. அரசாங்கத்தின் கோரிக்கையை ஏற்றுக்கொள்வதைத் தவிரவேறு வழியில்லை யென்று சபையினர் விடுத்த அறிக்கையொன்றில் கூறியது தென்னுபிரிக்க கிரிக்கட்கோஷ்டியின் வருகைரத்து செய்யப்பட்டதை இந்திய கல்விமந்திரி டாக்டர் ராவ் வரவேற்றிருக்கிறார். தென்னுபிரிக்க விளையாட்டு மந்திரி இதுபற்றி கருத்து வெளியிடுகையில் பயமுறுத்தலுக்கு அஞ்சி எமது கிரிக்கட் கோஷ்டியின் விஜயத்தை ரத்து செய்துவிட்டார்கள் என்ருர்.

### இந்தியாவில்

# வகுப்பு ஒற்றுமைக்காக கூட்டு பிரசார இயக்கம்

புதுடில்லி, 23

இந்தியவில் வகுப்பு ஒற்றுமையை நிலைநாட்டுவதற்கென பிரசார கூட்டு இயக்கம் ஒன்றை நிறுவுவதற்கு முடிவுசெய்யப்பட்டிருக்கின்றது.

தேசிய ஒருமைப்பாட்டுச் சபை வெளியிட்டுள்ள யோசனைகளில் அடிப்படையில் இந்த இயக்கம் செயல்படும்.

சமீபகாலத்தில் இனக்கலகம் பாதித்த பகுதிகளில் இந்த இயக்கம் முதலில் செயல்படத்தொடங்கும் இச்சபையின் தலைவராக திரு. சவான் இருப்பார் தேசம் முழுவதுமுள்ள அரசியல் கட்சிகள் யாவும்பங்குபற்றும் விதத்தில் இவ்வியக்கம் செயல்படும்.

நேற்று நடைபெற்ற தேசிய ஒருமைப்பாட்டுக் கமிட்டிக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி பேசியபோது. வகுப்புக் கலவரத்தைத் தூண்டுபவர் எம்மதத்தவராயிருப்பினும் தண்டிக்கப்படவேண்டும் என்று குறிப்பிட்டார்.

வகுப்புவாதத்திற்கு எதிரான தமது போராட்டத்தைக் கைவிட முடியாது என்று குறிப்பிட்ட பிரதம மந்திரி மதம், மொழி, ராஜ்யம் என்பனவற்றின் பெயரால் சட்டத்தை மீறி எவரும் நடப்பதற்கு அனுமதிக்க முடியாது என்றார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

### சோவியத் எழுத்தாளர் கைது!

மாஸ்கோ மே. 23

பிரபல சோவியத் எழுத்தாளரான ஆந்திரே அமர்விக் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்.

திரு. அமர்விக் சோவி[illegible]

### தேர்தலுடன் இணைந்து வரும் அவசரகால சட்ட நினைவுதினம்

கொழும்பு, வெள்ளி

நாட்டின் அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட பன்னிரண்டாவது ஆண்டு தினமும், ஏழாவது பொதுத்தேர்தலும் ஒரே தினத்தில் இணைந்துள்ளது.

1958-ம் ஆண்டு கவர்ணர் ஜெனரலாக இருந்த சேர். ஒலிவர் குணத்திலகா அவசர காலச் சட்டத்தைப் பிறப்பித்தார். பத்திரிகைத் தணிக்கை அப்போது அமுல் நடத்தப்பட்டதுடன் தமிழரசுக்கும், கே. எம். பி ராஜரத்தின தலைமையிலான ஜாதிகவிமுக்தி பெரமுனைக்கும் தடைவிதிக்கப்பட்டது.

# தேர்தல் போட்டி-1970

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளமுருகனார் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு அருகாமையில் நடந்த இக்கூட்டத்துக்கு வழக்கறிஞர் திரு. நா. ஏகாம்பரம் தலைமை வகித்தார்.

யாழ்ப்பாணக் கல்லூரி பொருளாதாரவியல் விரிவுரையாளர் திரு. வன்னியசிங்கம் உரையாற்றும் பொழுது "சமஷ்டிக்கட்சியார் போட்ட தப்புக்கணக்குகளால் இந்நாட்டில் தமிழினம் அடைந்த கேவல நிலை உலகில் வேறெங்கணும் நடைபெறவில்லை பிரித்தானியர் ஆட்சியில் மாட்சிமைதங்கிய பிரிட்டிஷ் அரசினரின் பிரஜைகளாக தமிழர்கள் தமிழ்நாட்டிலிருந்து இலங்கை தென்னாபிரிக்கா, பர்மா, மலேயா, மேற்கிந்தியத்தீவுகள், போர்னியோ போன்ற இடங்களுக்கு தொழிலாளிகளாக இட்டுச் செல்லப்பட்டனர். இவர்கார். பின்னேயதை ஆதரித்தார். இதில்ஒரு தவறுமில்லை ஆனால் சமசமாஜக்கட்சியினருடன் திரு தொண்டமான் கட்சியும் தீர்க்க தரிசிகளில்லாத தமிழரசுக்கட்சியும், இந்திய வம்சாவழியினரை பிரஜா உரிமை கோரிமனுச் செய்யவிடாது 20 மாதங்கள் தடுத்தார்கள் கடைசி 4 மாதங்களில் மனுக்கள் அவசர அவசரமாக சமர்ப்பிக்கப்பட்டன. மனுக்களில் தவறுகள் நிறைந்திருந்தமையால் அவை நிராகரிக்கப்பட்டன. பெருந்தொகையான மக்கள் நாடற்ற பிரஜைகளானார்கள். இந்தப் பாவம் யாரைச் சூழ்வது?" என்றார்.

திரு. மோதிலால் நேரு, திரு. எம். கே. சுப்பிரமணியம், திரு. பொ. நாகரத்தினம், திரு. ஆ. தியாகராசா, தொண்டர் அருளம்பலம் உட்பட இன்னும் பலரும் பேசினர்.

# 'இன பேதமற்று வடக்கு தெற்கை இணைக்கும் கட்சி'

உடுப்பிட்டி, சனி

"சில பேர்வழிகள் பகடைக்காய் விளையாட்டுக்கும் பணப்பெட்டிகளை நிரப்புவதற்கும் தேர்தலைப் பயன்படுத்த முனைகின்றனர். இதன் காரணமாகவே இன்று இலங்கையில் பாமர மக்கள் ஒதுக்கப்பட்டுள்ளனர்."

இவ்வாறு அகில இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் உப-தலைவர் திரு. பி. பி. விஜயசுந்தரா உடுப்பிட்டித் தொகுதியில் கம்யூனிஸ்ட் வேட்பாளராகப் போட்டியிடும் திரு. திரு.பொன்.குமாரசாமியை ஆதரித்து நடைபெற்ற பிரசாரக்கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

இக்கூட்டம் கரவெட்டி மேற்கு உச்சில் வயிரவர் ஆலய அண்மையிலுள்ள அமரர் பொன். கந்தையா அரங்கில் திரு. எஸ். சபாரத்தினம் தலைமையில் நடைபெற்றது. திரு. விஜயசுந்தரா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"முன்னர் திரு. பொன். கந்தையாவை அன்புக்கரம் நீட்டி அழைத்தோம். இன்று திரு.வி.பொன்னம்பலத்தை அழைக்கின்றோம். எமது கட்சியில்தான் திரு. பீட்டர் கெனமனும், திரு. விக்கிரமசிங்காவும் அங்கம் வகிக்கிறார்கள். இன மத பேதமற்ற கட்சி எங்கள் கட்சிதான். எமது கட்சி வட இலங்கை முதல் தென்னிலங்கைவரை பரந்துள்ளது. தென்னிலங்கையில் கே. எம். பி. ராஜரத்தினா இருப்பதுபோல வட பகுதியில் தமிழரசுக்கட்சியினரும் தமிழ்க்காங்கிரஸ் கட்சியினரும் பிற்போக்குக் கட்சிகளாக இயங்கிவருகின்றனர்."

கம்யூனிஸ்ட் வேட்பாளர் திரு. பொன். குமாரசாமி பேசும்போது குறிப்பிட்டதாவது: "இந்நாட்டில் நாம் எந்தக் கட்சிக்கு வாக்களிக்க வேண்டுமென்பதைத் தீர்மானித்துக் கொள்ளவேண்டும். ஒருபக்கம் முக்கூட்டணியும் மறுபக்கம் யு.என்.பி.யும் ஆட்சிபீடத்தைக் கைப்பற்றுவதற்கான பலப்பரீட்சையில் ஈடுபட்டுள்ளன. ஏனைய கட்சிகள் மறைமுகமாக நிற்கின்றன.

இன்று சுமார் 14 நாடுகளில் சோஷலிசம் நிலவி வருகிறது. இத்தகைய நாடுகளில் விவசாயிகள் அடிமைநீங்கிச் சுதந்திரம், சுய உரிமை, இலட்சியம் என்பவற்றின் தத்துவத்தை உணர்ந்துள்ளார்கள். பல நாடுகளில் தீய சக்திகள் புகுந்துகொள்வதாலேயே நாட்டில் கலவரங்கள் ஏற்படுகின்றன. இத்தீயசக்திகள் அழிந்துபோவதற்கு எதிர்வரும் தேர்தல் பொருளாதாரநோக்குடன் இணைய வேண்டும்."

திருவாளர்கள் சுப்பிரமணியம், தெட்சணாமூர்த்தி ஐயர், ஜீ. சமரக்கொடி உட்பட வேறு பலரும் பேசினர்.

தோன்று என்று அறிவித்திருக்கின்றது.

இந்த இருதாக்குதல்கள் பற்றியும் இஸ்ரேலும் லெபனானும் ஐ. நா. பாதுகாப்புச் சபைக்கு புகார் செய்திருக்கிறார்கள்.

இஸ்ரேலிய பாடசாலை பஸ்வண்டி மீது அரபுக் கொரில்லாக்கள் நடத்திய தாக்குதல்களுக்கு முற்றிலும் லெபனான்தான் பொறுப்பேற்கவேண்டும் என்று இஸ்ரேலிய பிரதம மந்திரி திருமதி கோல்டா மெய்யர் கூறியிருக்கிறார்.

## கொரில்லா தலைவருக்கு கத்திக்குத்து

நியுயோர்க்கிலுள்ள அரபுக் கொமாண்டோ ஸ்தாபனம் ஒன்றின் காரியாலயத்தில் அந்த ஸ்தாபனத்தின் தலைவர்களில் ஒருவரான ஹஸன் என்பவர் கத்திக்குத்துக்காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். யூதர்கள் என்று கருதப்படும் ஓர் இளைஞர்கள் கூட்டம் அவரை அவரது காரியாலயத்தில் வைத்து தாக்கியதாகக் கூறப்படுகின்றது.

ணைக்கு எடுத்துக்கொண்ட நீதிபதிகள் என். அன்ட்லி, வி. தாத்தர்ச்சாரி ஆகியோர் ஜெகஜீவன்ராம், சங்கர் தயாள சர்மா, சி. சுப்பிரமணியம் ஆகியோரை கோட்டில் ஆஜராகும்படி கட்டளை பிறப்பித்துள்ளார்கள்.

## மாணவர்கள் கேரோ பரீட்சை ஒத்திவைப்பு

புதுடெல்கி மே 23

மாணவர்கள் முற்றுக்கையிட்டு பரீட்சையை ஒத்திவைத்தார்கள்.

விக்கிரம் பல்கலைக்கழகம் நடாத்தவிருந்த பரீட்சையை தள்ளிப்போடும்படி 200 மாணவர்கள் துணைவேந்தரை கேரோ செய்துகொண்டு பரீட்சையை தள்ளிப் போடும்படி வற்புறுத்தியபோது இறுதியில் மாணவர் கோரிக்கைக்கு துணைவேந்தர் பணிந்தார்.

துணைவேந்தர் டாக்டர் கல்கிங்சுமன் ரெயில்நிலையத்திற்கு வந்திருந்தபோது மேற்படி சம்பவம் நடந்தது.

# 'இனக் கலவரத்தைத் தூண்டியவர் ஜே.ஆர்'

உடுப்பிட்டி, ஞாயிறு

"சிறுபான்மைச்சமூகமக்களின் பிரச்னை நியாயமானதே. நாம் ஆட்சிக்கு வந்ததும் 1958-ம் ஆண்டு சமூகக்குறைபாடுகள் சட்டத்தைத் திருத்தி அமைத்துச் சிறுபான்மைத் தமிழ் மக்களின் பிரச்னைகளைத் தீர்த்து வைப்போம்."

இவ்வாறு இலங்கைக் கம்யூனிஸ்ட்கட்சித்தலைவர் திரு. பீட்டர்கெனமன் உடுப்பிட்டித்தொகுதியில் கம்யூனிஸ்ட் வேட்பாளராகப் திரு.பொன்.குமாரசாமியை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் உறுதி அளித்தார்.

இக் கூட்டம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி யாழ். கிளை உபதலைவர் டாக்டர் எஸ். எஸ். மாசிலாமணி தலைமையில் வதிரியில் நடைபெற்றது. திரு. பீட்டர்கெனமன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"எம்மை வகுப்புவாதிகள் என்று இங்கு பிரசாரம் செய்து வருகின்றனர் ஆனால் உண்மையில் வகுப்புவாதிகள் ஐக்கிய தேசியக்கட்சியில்தான் இருக்கிறார்கள், முதலாளித்துவ பத்திரிகைகள் எம்மை இனக்கலவரத்தைத் தூண்டுவோர் என்று தூற்றுகின்றன. ஆனால் இனக்கலவரத்தைத் தூண்டியவர் ஜே. ஆர். தான் என்பதை இவர்கள் மறந்துவிட்டார்கள் போலும்.

தமிழரசுக்கட்சி தமிழ் மக்களை ஈழத்தில் விலை கூறிவிற்கிறது இது தமிழ்மக்களை ஏமாற்றும் ஒருசெயல் அவர்களுக்குத்துணிவு இருந்தால் தேர்தல் முடிந்ததும் யாரை ஆதரிப்பார்கள் என்பதை இப்பொழுதே கூறட்டும். தமிழரசுக்கட்சியினரும், தமிழ்க்காங்கிரஸ் கட்சியினரும் நிச்சயம் யு. என். பியைத்தான் ஆதரிப்பார்கள். எமது கூட்டணி ஆட்சிக்கு வந்ததும் நிச்சயமாக இரண்டு கொத்து அரிசி தருவோம். வடக்கு, கிழக்கில் பல்கலைக்கழகங்கள் நிறுவிக்கொடுப்போம் மகாவலிகங்கையை வடக்கே திருப்பச் சகல உதவிகளையும் புரிவோம்.

அமைச்சர் பிலிப் குணவர்த்தனவின் மகன் திரு. இன்டிகா குணவர்த்தன பேசுகையில், தமிழரசுக்கட்சி மூலம் யு. என். பியால் தமிழ் மக்களின் பிரச்னைகளைத்தீர்க்கமுடியாது வளர்ந்து வரும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, சமசமாஜ, கம்யூனிஸ்ட்கட்சிகளின் கூட்டணி மூலம்தான் பிரச்னைகளைத் தீர்க்க முடியும் என்று சொன்னார்.

கம்யூனிஸ்ட் வேட்பாளர் திரு. பொன். குமாரசாமி அட்வகேட் திரு. எஸ். ஜெயசிங்கம் ஆகியோரும் பேசினர்.

டுகளில் தேசிய அரசாங்கம் செய்த ஒரே ஒரு நன்மை தன்னைச் சார்ந்த முதலாளி வர்க்கத்தினருக்கு உழவு யந்திரங்களையும் கடன்களையும் வழங்கியமையேயாகும். எனக் கூறினார்.

## "திருமலையில்காங்கிரஸ் வேட்பாளரை ஏன் நிறுத்தவில்லை"

உடுப்பிட்டி ஞாயிறு

திருமலையில் தமிழ்க்காங்கிரஸ் கட்சி ஏன் போட்டியிடவில்லை என்பதற்குத் தமிழ்க்காங்கிரஸ் பொதுச் செயலாளரும், முன்னாள் உபசபாநாயகருமான திரு. மு. சிவசிதம்பரம் நமது நிருபரிடம் விளக்கம் தெரிவித்தார்.

அவர் கூயறிதாவது: "திருமலையில் தமிழர் தமக்கு இடையில் போட்டியிட்டால் சிங்களவர் வெற்றிபெறக்கூடிய சூழ்நிலை ஏற்படும். இச்சமயத்தில் நாம் ஒரு வேட்பாளரைப் போட்டால் திருமலையில் ஆர். ஜி. சேனநாயக்கா வெல்ல இடம் கொடுக்கிறார்கள், துரோகிகள் என்று எம்மைக் கூறுவார்கள்.

சிங்களவர் ஒருவர் எம். பியாக வருவதைத் தடுக்கும் முகமாகவே தமிழ்க்காங்கிரஸ் திருமலையில் போட்டியிடவில்லை."

## கைது

மாஸ்கோ மே. 23


பிரபல சோவியத் எழுத்தாளரான ஆந்திரே அமர்விக் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்.

திரு. அமர்விக் சோவியத் அரசைக்குறைகூறும் வகையான இலக்கியங்களைப் படைத்து மேற்கு நாடுகளில் பிரபல்யம் பெற்றவர். சோவியத் தலைமைப்பீடம் 1984-ம் ஆண்டில்பெரும்பிரச்னைகள் தோன்றினாலும் சீனாவுடனாயுத்தத்தினாலும் சிதறுண்டு போகும் என்று ஆருடம் கூறும் இலக்கியம் ஒன்றை திரு. அமர்விக் படைத்தார். இதனை டச்சு பத்திரிகையாளர்கள் வெளி நாடுகளுக்கு கடத்திச் சென்றார்கள். அமெரிக்காவிலும், ஜப்பானிலும் அதுபிரசுரமாற்று.

திரு. அமர்விக்கின் இல்லத்துக்குபொலிசார் வந்து அவரைக் கைது செய்து கொண்டு போனார்கள் என்று அவரது துணைவியார் கூறினார்.

1965-ம் ஆண்டிலும் இவர் கைது செய்யப்பட்டு தொழில் முகாம் ஒன்றில் இரண்டு ஆண்டுகள் பணிபுரிந்தார்.

# "ஒற்றுமையாக வாழவைக்க தவறி விட்டார்கள்"



யாழ்ப்பாணம், ஞாயிறு

"தமிழ் பிரதிநிதிகள் சிங்களப் பிரதிநிதிகளுடனும், சிங்களமக்களுடனும்நேசக்கரம் நீட்டிபெரும்பான்மையினமான அவர்கள் அனுதாபத்தைப்பெற்று தமிழினத்தையும் சிங்கள மக்களையும் ஒற்றுமையாக வாழவைக்கத் தவறி விட்டார்கள்"

என்று உடுவில் தொகுதியில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் திரு சி. பொ. வ. மா. க. முதலியார் குறிப்பிட்டார்.

ஏழாலை வடக்கு ஆலங்கட்டைப் பிள்ளையார் கோவிலுக்கு அருகிலுள்ள மைதானத்தில் திரு. இளையதம்பி இன்பரத்தினம் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் திரு. முதலியார் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

"பல்கலைக்கழகம் யாழ்ப்பாணத்தில் அமைவதை எதிர்க்கிறார்கள். சுகாதார வசதியற்ற திருமலையைக் கோருகிறார்கள். தமிழரசர் விட்ட பெரிய தவறுகளில் இது பெரியதொன்று.

தமிழினம் இந்த நாட்டில் நிம்மதியாக வாழ வேண்டுமானல், பெரும்பான்மை இனத்தின் அன்பையும், ஆதரவையும், அனுதாபத்தையுமே பெற்று வாழவேண்டும். இத்தொகுதியின் பொருளாதார வளத்தை உயர்த்த 33 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து போட்டியிடுகிறேன். என்னை ஆதரியுங்கள்."

# தேர்தல் போட்டி-1970

இலங்கையில் 7-வது ஆட்சி மன்றத்தின் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதற்கான பொதுத்தேர்தல் இம்மாதம் 27-ம் திகதியன்று நடைபெறவிருப்பது வாசகர்கள் அறிந்ததே. அதையொட்டி 'ஈழநாடு' ஒரு போட்டி நடாத்த ஏற்பாடு செய்திருக்கின்றது. அரசியற் கட்சிகளும் சுயேச்சை வேட்பாளர்களும் பெறும் ஆசனங்களைச் சரியாகக் குறிப்பிடும் வாசகருக்கு முதலாம் பரிசும் ஏறத்தாழ சரியான விடையனுப்பும் வாசகருக்கு 2-ம் பரிசும் அதற்கடுத்த படியான சரியான விடைக்கு 3-ம் பரிசும் வழங்கப்படும்.

போட்டியில் பங்குபற்ற விரும்புகின்றவர்கள் எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளும் சுயேச்சை வேட்பாளர்களும் பெறும் ஆசனங்களை இங்கே பிரசுரமாகும் கூப்பனில் உரிய இடத்தில் எழுதி "தேர்தல் போட்டி - 1970" ஈழநாடு, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 26-5-70 க்குப் பிந்தாமல் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவேண்டும். குறித்த திகதிக்குப் பிந்திய கூப்பன்கள் எக்காரணங்களைக் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

ஒருவர் எத்தனை கூப்பன் வேண்டுமானாலும் அனுப்பலாம். நேரே கொடுக்க விரும்புவோர் "ஈழநாடு" அலுவலகத் தபால் பெட்டியில் சேர்க்கவும்.

கேள்விகள்:

1. இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு வடக்கு-கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.
2. அகில இலங்கைத்தமிழ் காங்கிரஸ் கட்சிக்கு வடக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.
3. ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.
4. கூட்டணிக்கட்சிக்கு வடக்கு - கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்

கூட்டணிக் கட்சியுள் அடங்குவன:

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (மாஸ்கோ-பீக்கிங்), லங்கா சமசமாஜக் கட்சி என்பன.

5. சுயேட்சையாளர்களுக்கு வடக்கு-கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.

சுயேச்சைகளுள் அடங்குவன:

தமிழர் சுயாட்சிக் கழகம், இலங்கைத்தமிழர் ஒற்றுமை முன்னணி, சிங்கள சுமாஜனக் கட்சி, இ. கதி,. க.மு கட்சி என்பன.

பரிசு விபரங்கள் விரைவில் வெளிவரும்

'ஈழநாடு' ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

## 1970 தேர்தல் போட்டிக் "கூப்பன்"

## 'ஈழநாடு'

| | |
|---|---|
| இ. த. அ. கட்சி | |
| அ. இ. த. கா. கட்சி | |
| ஐ. தே. கட்சி | |
| கூ. கட்சி | |
| சுயேச்சை | |

பெயர் : ............................................

விலாசம் : ............................................

............................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் வைகாசி மாதம் 10-ந் திகதி (24-5-70)


## எதிர்காலமும் தமிழரும்

ஈழநாட்டின் சரித்திரத்திலேயே ஒரு முக்கியமான கட்டம் நெருங்கிவருகின்றது. வருகிற 27-ந் திகதி நடைபெறும் பார்லிமெண்ட் பொதுத்தேர்தல் முடிவுகள், நம்நாட்டின் எதிர்காலத்தையும் தமிழ்பேசும் மக்களையும் அவர்களின் எதிர்காலத்தையும் நிர்ணயிக்க வெகுதூரம் காரணமாக இருக்கும். மேலும் ஈழத்தில் என்ன நடைபெறுகிற தென்பதை ஆசியாவின் மற்ற பகுதிகளும் ஆவலுடன் கவனித்துவருகின்றன. காரணம் நம்நாட்டிலே ஜனநாயகம் முறிந்து சர்வாதிகாரம் ஏற்படாமல், சீராக நடைபெற்றுவருவது தான் அரசாங்க நிர்வாகத்திலே ஜனநாயகக் கொள்கை, எல்லா மக்களுக்கும் எல்லாப் பகுதியினருக்கும் நன்மை புரியவும் இன்னும் செய்யவேண்டியவை அதிகமுண்டு என்றாலும் மற்றும் சில நாடுகளுடன் ஒப்பிடுகையில் இங்கு ஜனநாயக ஸ்தாபனங்கள் அவ்வளவு மோசமாக நடைபெறவில்லை. இங்குள்ள நிலைமை அதிக அமைதியாகவும், வளர்ச்சிக்கான வழியிலும் இருப்பது குறிப்பிடத்தக்கது, இன்றைய நிலைமையையும் எதிர்காலத்தையும் பற்றி யோசிக்கையில் இவை வரவேற்கத்தக்க சாதகமான அம்சங்களாகும்.

இலங்கையிலுள்ள தமிழ் சமூகத்துக்கு மூன்றுவித கடமைகளுண்டு, ஒன்று, தங்கள் தாய்நாடான இலங்கை அனைத்தின் பொது நலத்துக்காக தனது மேலான பணியைச் செய்வது. 2 தனது நன்மைகளையும், தனித்தன்மையையும் பாதுகாத்துக்கொள்வது, 3 உலக நன்மைக்காக தன்னால் கூடுமானதைச் செய்வது.' சரித்திரகாலம் முதல் தமிழ் மக்களும், தமிழ்நாகரிகமும் தமிழ்ப் பண்பாடும், உலகில் பெற்றிருக்கும் மேலான ஸ்தானம் காரணமாகவும் இலங்கையின் நன்மைக்காக வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும் செய்துள்ள பணிகள் காரணமாகவும் அவர்கள் எதிர்காலத்தில் செய்யவேண்டிய விசேஷ காலத்தையும் உருவாக்குவதில், பலாத்காரம் அதிகம் இடம்பெற்றாலும், அமைதியான முறைகளிலே அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி வேற்றுமைகளை பரஸ்பரம் பேச்சுகள்மூலம் தீர்த்துக்கொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்ட நிலைமைக்கு உலகம் இன்று வந்திருக்கிறது. இலங்கையைப் போன்ற ஒரு நாட்டில் தேர்தலிலே வாக்குரிமையை மக்கள் விவேகத்துடன் பயன்படுத்துவதுடன், தேர்தல் மூலம் கிடைக்கும் அரசியல் செல்வாக்கையும், சக்தியையும், தக்கபடி உபயோகிப்பது இவ்விரண்டும் முக்கியமான தவிர்க்கமுடியாத விஷயங்கள். இவ்வித இரண்டு வழிகளிலும் மிக கவனமாகத் தமிழர் இருந்தாலே அவர்கள் தங்கள் நன்மையையும் இலங்கை உள்ளிட்ட உலக நன்மையையும் காத்துக்கொண்டவர்களாவர்,

இந்த மேலான நோக்கங்களைப் பெறுவதற்கு, பார்லிமெண்ட் சபைக்குத் தெரிவு செய்யப்படும் தமிழர் அனைவரும் கட்சிபேதமின்றி பரஸ்பர குரோதங்களையும் வேற்றுமைகளையும் கூடுமானவரை விலக்கிக்கொள்வார்களென்று நாம் நம்பிக்கையுடன் பிரார்த்திக்கின்றோம். வேற்றுமைகள் இருக்கலாம். என்றாலும் அவற்றை கண்ணியமபன, விவேகமான முறையில், தெரிவிக்கவேண்டும், பார்லிமெண்ட் சபையிலே மற்ற சமூகப் பிரதிநிதிகள் இருப்பதால் இது குறித்து தமிழ்ப் பிரதிநிதிகள் அதிக கவனமாக இருத்தல்வேண்டும், தமிழ்சமூகத்தின் உரிமைகளுக்கும் செனெட்சபையிலும், ஜனப்பிரதிநிதிசபையிலும் உள்ள தமிழ்ப் பிரதிநிதிகள் கடுமையாக உழைக்கவேண்டியிருப்பதால் இது மிகவும் அவசியமாகின்றது.

இந்த மேலான இலட்சியத்துக்காக ''ஈழநாடு'' தன்னைத் தமிழ் சமூகத்தின் சேவைக்கும் நாட்டின் பணிக்கும் கட்சி முதலிய சார்புகளின்றி அர்ப்பணித்துக்கொள்ள மீண்டும் மிக வினயத்துடன் உறுதிஎடுத்

# வாக்காளர் கடமை என்ன?

## உரிமைகளைப் பெற உங்கள் வாக்கை வழங்குங்கள்

தமிழ் மக்கள் மத்தியில் இரு பெரும் கட்சிகளே உள. ஒன்று இலங்கைத் தமிழரசுக் கட்சி, மற்றையது அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ். இவற்றின் சென்றகால வரலாறு பற்றிச் சிந்திப்பின் ஓர் உண்மை புலனாகும். ஒவ்வோர் காலத்தில் ஒவ்வோர் கட்சி ஆளும் கட்சிபோன்றும், மற்றது அதன் எதிர்க்கட்சிபோன்றும் செயலாற்றின என்பதை ஊகிக்கலாம். இந்த உண்மையை கட்சிகளின் பேச்சுகளிலிருந்து தெளிவாக அறியலாம். 'பாம்பின் கால் பாம்பு அறியும்', என்பது பழமொழி. அதுபோல, தமிழ் பேசுவோர் சார்பிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களே, அங்கு நடைபெற்ற தில்லுமல்லுகளை எடுத்துரைக்கும்போது நாம் அவற்றை அலட்சியம் செய்தல் தற்கொலைக்கொப்பாகும். ஒவ்வோர் கட்சியிலும் பொறுப்பும், கண்ணியமும், நேர்மையுமுள்ள பா-உறுப்பினர்கள் காணப்படுகின்றனர். அவர்கள் என்ன கூறுகின்றனர்? ஒரு கட்சி எடுக்கும் முயற்சிக்கு மற்றக்கட்சி முட்டுக்கட்டை போடுகின்றதாம். இதுநன்கு ஆராயப்படவேண்டிய விஷயம். இதனால் இன்னொருஉண்மை புலனாகும். அஃதாவது இவ்விருகட்சிகளும் தமிழ் பேசுவோருக்கு விமோசனம் அளிக்கும் கட்சிகளாக அமையவில்லையென்பதே. இதற்கு கட்சிகளின் அடிப்படைக்கொள்கைகள் அல்லது பா. உறுப்பினரின் சொந்த விருப்பு வெறுப்புக் காரணமாகலாம்.

ஒரு கட்சியைச்சேர்ந்தவர்களே பாராளுமன்றம்போகவேண்டுமாம். மற்றக்கட்சியிலுள்ள எவருமே பாராளுமன்றம் போகக்கூடாதாம். இதனால் ஏகோபித்த குரல் எழுப்ப முடியாதாம். இது நடைமுறையில் சாத்தியமாகுமா? சாத்தியமாகாதது மட்டுமல்ல, உண்மை ஜனநாயக பண்புக்கும் கொள்கைக்கும் முரண்பாடாகும். ஒவ்வோர் தொகுதியிலுமுள்ள பெரும்பான்மை மக்கள் ஒத்த கருத்துடையவர்களாயிருக்க முடியாது. அவர்களின் அபிலாஷைகள் ஒன்று சேர்ந்து சாத்தியமான திட்டங்களை வகுத்து ஏகோபித்த குரல் எழுப்பலாம். அதைவிடுத்து மாறுபட்ட கொள்கைகளை முன்வைத்து, கட்சிகளை வளர்க்கும் நோக்குடன் செல்பவர்கள் எங்ஙனம் ஒன்றுசேர்ந்து ஏகோபித்த குரல் எழுப்பமுடியும்? முடியாது இதனாலேயே நாட்டில் குரோதங்கள் தகராறுகள் சண்டைகள், கண்டனங்கள் தோல்வி மனப்பான்மை தாண்டவமாடுகின்றன. இருபத்தைந்து லட்சம் தமிழ் பேசும் மக்களின் ஆதரவைப் பெற்று ஒரே கட்சியின் கீழ் பாராளுமன்றம் செல்ல முடியும் என்ற தன்னம்பிக்கையுள்ள கட்சி எதுவாயினும், அந்நோக்கம் நிறைவேறவிடத்து வெற்றி பெறும் இருபது பா-உறுப்பினர்களைச் சில அடிப்படை உரிமைகளைப் பெறும் நோககத்துடன் ஒன்று சேர்க்க முடியாதா? முடியும். நாட்டுப்பற்றும், இனப்பற்றும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும் இருப்பின் இது சாத்தியமே. அதைவிடுத்து கைப்பந்தாட்டம் ஆடுவதில் பலன் கிட்டாது. சும்மா கிடந்த பந்தை ஒருவர் எடுத்து எதிர்ப்பக்கம் நோக்கி அடிக்க, மற்றவர் திருப்பிஅடிக்க, பின் திருப்பி அடிக்க ஆட்டம் நடந்துகொண்டேயிருக்கும் களைப் பேற்பட்டவுடன் ஆட்டமும் முடிவடையும் இந்நிலை அரசியல் வாழ்வில் தொடருமாகில் உமிக்குற்றுதலாகவே முடியும் இதன் காரணமாகவே, ஒருவர் ஒரு கொள்கையைப் பிரசாரஞ் செய்தால், மற்றவர் எதிர்ப் பிரசாரம் செய்து காலத்தைப் போக்கி, மக்களின் மனத்தைக் குழப்பாமல், தப்தம் கொள்கைகளையும் அவற்றுக்குச் சாத்தியமான ஆதாரங்களையும் எடுத்துக் காட்டும்படி மக்கள் கேட்கின்றனர். பண்பற்ற முறையில் பல வருடகாலமாக நடைபெற்ற பிரசாரங்கள் தான் பாராளுமன்ற உறுப்பினரிடையே தனிப்பட்ட முறையில் குரோதங்களை வளர்த்து, [illegible] நிலையை ஆக்கியுள்ளது. கட்சிகளும் மக்களின் ஆத இருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் முற்கூறியமுறையில் அரசியல் செல்வாக்குப் பெற்றபின்தானே விலகிநிற்பார் என எதிர்பார்க்கமுடியாது. அவரைத்தடுக்க முற்பட்டால் வேறொரு கட்சியில் சேர்ந்தோ அல்லது சுயேச்சையாகவோபோட்டியிடமுயற்சிப்பார்அப்போது கட்சியின் நிலையென்ன? அவரை வெளியில் விட்டால் கட்சியால் நியமிக்கப்படும் புதிய அபேட்சகரை முன்னையவர் தோற்கடிப்பார் என்பதற்கு ஆரூடம் கூறத் தேவையில்லை, முன்பெற்ற செல்வாக்கு அவரை வளர்த்த கட்சிக்கு ஆபத்தை உண்டாக்குமென்பதை அறிந்தகட்சி திரும்பத்திரும்ப அவரையே தேர்தலுக்கு நிறுத்தும் துர்ப்பாககிய நிலைக்குத்தள்ளப்படும் இந்நிலையைத்தடுக்க கட்சியில் குறிப்பிட்டகால அளவுக்கே ஒருவர் தேர்தலில் நிற்கலாம் என்ற நிபந்தனை இருக்கவேண்டியது அவசியமாகும், இளைப்பாறும் பா-உறுப்பினர் கட்சியின் ஆலோசகராகத்தொண்டாற்ற வேண்டியது அவரின் நன்றிக்கடமையாகும், இவ்வேளையில் வாக்காளர்கடமையென்ன? இன்று தமிழ்ப்பேசுவோருக்கு என்றுமில்லாத ஒருசோதனைககாலமென்றும், அவர்களின் தலைவிதி நிர்ணயிக்கப்படப்போகிறதென்றும் மேடைகளில் பேசுகின்றனர் இப்போது தான் அரசியல்வாதிகளும் மற்றவர்களும் நிலைமை கழுத்துக்குமேல் வந்து விட்டதை உணருகின்றனர். நல்ல அறிகுறி இன்றுவரை மக்கள் கட்சிகளுடன் ஒத்துழைத்தது போன்று கட்சிகளும் மக்களுடன் ஒத்துழைத்தால் மக்களுக்கு மட்டுமல்ல கட்சிகளுக்கும் நன்மை பயக்கும் வாக்காளர்களும் அதனை நன்கு உணரவேண்டும் தமிழ்ப்பேசுவோர் சார்பில் வெற்றி பெறும் பாராளுமன்ற உறுப்பினர்கள் எககட்சியிலிருப்பினும் அடிப்படை உரிமைகளைப் பொறுத்த வரையில் ஒன்று சேர்ந்து ஓர் ஆககத்திட்டத்தை வகுத்துச் செயற்படுத்தவேண்டும் திட்டம் வகுககும்போது கட்சிக கொள்கைகள் சில வளைந்து கொடுககாதிருக்கலாம் எனினும் இனவிடுதலையை முன்வைத்து ஒன்று சேர்ந்து நேர்மையுடனும் நிதானத்துடனும் சிந்தித்து ஏற்றதிட்டத்தை மககள் ஆதரவுடன் உருவாககி அது செயல்பட அயராது உழைககவேண்டும் ஒன்று சேர்வதற்குப்பாதகமாக ஏதும் கடின கொள்கை கிளம்புமாகில் அக்கொள்கையைத்தற்காலிகமாகவேனும் ஒத்திவைதல் வேண்டும் வாக்காளர் முற்கூறியவற்றை நிபந்தனைகளாகஎடுத்துக் கூற வேண்டும் அவற்றை மனப்பூர்வமாக ஏற்று அதன்படி செயல்படும் உறுதியும் நேர்மையும் மனச்சாட்சியும், நிறையப்பெற்ற அபேட்சகராய் எவர் காணப்படுவாரோ அவருக்கே தங்கள் வாககுகளை அளிக்கவேண்டும்.

தமிழர் விடுதலைககழகம், ஒற்றுமைமுன்னணி சமசமாசக்கட்சி பொதுவுடமைக கட்சி சர்வோதயமுன்னணி உடபட தமிழ் பேசும் மக்கள் சார்பில் போடடியிடும் அபேடசகர் எககடசியிலிருப்பினும் மேற்கூறிய நிபந்தனைகளை ஏற்று வெற்றி பெற்றபின் அமுலாகக வேண்டும் அப்போது ஒரு கடசி கொள்கைமாறுபாடு காரணமாக வெற்றி பெற்றவரை கடடுப்படுத்த முற்படின் கடசியிலிருந்து விலகத் தம்மைத் தயார் படுத்திக்கொள்ள வேண்டியது அன்னாரின் புனிதகடமையாகும்.

-பொ.இரத்தினம்-

# 'வெளிநாடுகளுக்குச் சென்று உலகத்தை உணரவேண்டும்'

## கலாநிதி "நித்தி"யின் 'அனுபவம் பேசுகிறது'

''உயர்கல்வி பயிலும் நம் நாட்டு மாணவர்களும், மாணவிகளும் வெளிநாடுகளுக்குச் சுற்றுப்பயணம் செய்து அங்குள்ளசிறப்பியல்களையும், மக்கள்பிரச்னைகளையும் உணராததாலேயே குறுகிய மனப்பான்மையுள்ளவர்களாக இருக்கிறார்கள். உயர்கல்விபயில்பவர்களுக்கு சுற்றுலாக்கள் அவசியம் தேவை, அது மூளையை விருத்தி செய்வதுடன், பரந்த மனப்பான்மையையும், பரந்தஅறிவையும்அளிக்கிறது''

பேராதனை பல்கலைக் கழக ரசாயன விரிவுரையாளர் கலாநிதி இ. நித்தியானந்தன் யாழ்ப்பாணம் கன்னியாஸ்திரீமட மாணவிகள் மத்தியில் பேசுகையில் இப்படிக் கூறினார்.

தம்மைத் தாமே காப்பாற்றக்கூடியளவு ஆககிவைத்தால் இந்தச் சீதனப் பிரச்னைககே இடமில்லாதுபோய் விடும்,

'வெளிநாடுகளுககுத் தான் போய்வர வசதியில்லாவிட்டாலும் இந்தியா போன்ற அயல் நாடுகளுக்காவது நமது மாணவ மாணவிகள்சென்று அங்குள்ள சிறப்பியல்களை, மக்களை, மக்கள் பழக்க வழக்கங்களை தெரிந்து உணர்ந்துவர வேண்டும். கல்வி கற்கும் நாம் 'கிணற்றுத்தவளை'களாக இருக்கக்கூடாது. கிணற்றுத் தவளைகளாக இருந்தால் வாழ்நாள் முழுவதும் நாம் குறுகிய மனப்பான்மையுள்ளவர்களாகவே இருப் அவர்கள் முன்னேற்றமடைந்திருக்கிறார்கள். இப்படியான சூழ்நிலை ஒன்று உயர்கல்வி பயிலும் நம் மாணவர்களுக்கு ஏற்படவேண்டும்.'

### மகிழ்ச்சிப் புன்னகை

கலாநிதி 'நித்தி' அவர்கள் இப்படிக் கூறிமுடித்தபோது, மாணவிகள் மத்தியில் மகிழ்ச்சி கலந்து ஒரு புன்னகை வெளிவந்ததை காண முடிந்தது.

அந்தப் புன்னகை அவர்கள் முன்னேறத் துடிக்கிறார்கள் என்பதையும்உலகத்தை அறிய விரும்புகிறார்கள் என்பதையும் சொல்லாமல் சொல்லியது.

உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு 'நித்தி'யின்சொற்பொழிவு பயனுள்ளதாக அமைந்தது.

— பாமா

## சீதனப்பிரச்னை இளம் பெண்ணின் உயிரைப் பலி எடுத்தது

யாழ்ப்பாணம், ஞாயிறு சீதனப்பிரச்னை காரணமாக மனமுடைந்த இளம் பெண் ஒருவர் கழுத்தில் ரது சகோதரி ஒருவர் சீடு வைத்திருந்ததாகவும், விவாகத்துக்கு முன்னர் கடனை மீட்டுத்தரும்படி கேட்டதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னம் காரணமாகவும் இலங்கையின் நன்மைக்காக வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும் செய்துள்ள பணிகள் காரணமாகவும் அவர்கள் எதிர்காலத்தில் செய்யவேண்டிய விசேஷ பணிகளும் கடமைகளும் உண்டு. பொதுத்தேர்தல் முடிந்ததும், புதிய பார்லிமெண்ட் சபை ஆரம்பமாவதிலிருந்தே அவர்கள் மிகமுக்கியமான பங்கெடுக்க வேண்டியிருக்கிறது.

பலநாடுகளின் தலைவிதியையும் மக்களின் எதிர்காலத்துக்காக ''ஈழநாடு'' தன்னைத் தமிழ் சமூகத்தின் சேவைக்கும் நாட்டின் பணிக்கும் கட்சி முதலிய சார்புகளின்றி அர்ப்பணித்துக்கொள்ள மீண்டும் மிக வினயத்துடன் உறுதிஎடுத்துக்கொள்ளுகிறது. பொதுமக்களும் பார்லிமெண்டிலுள்ளவர்கள் அனைவரும் மற்றக்கட்சித் தலைவர்களும் ஸ்தாபனங்களும் சங்கங்களும் இந்த நோக்கத்துக்காக ஒத்துழைக்கவேண்டுமென பணிவுடன் வேண்டுகின்றது.

## சபாஷ் பிரிட்டன்

தென்னாபிரிக்க கிரிக்கெட் கோஷ்டியை பிரிட்டனில் வந்து விளையாடும்படி அழைப்பு விட்டிருந்ததை, பிரிட்டிஷ் எம். ஸி. ஸி.யினர் வாபஸ் வாங்கிக் கொண்டுவிட்டது விவேகமான முடிவாகும். இதற்காக அவர்களையும் பிரிட்டிஷ்பொதுமக்களையும் பாராட்ட வேண்டும்.

நிறத்துவேஷக் கொள்கையை கடுமையாகக் கடைப்பிடித்து வரும் தென்னாபிரிக்காவுக்கு இது நல்ல பாடமாக இருந்து இதைப் பற்றிச் சிந்திக்க உதவ வேண்டும். மனித உரிமையை அங்கீகரித்து, மனிதனுக்குமனிதன் வேற்றுமை காட்டக்கூடாதென்ற மேலான தர்மத்தை மீறி, தென்னாபிரிக்கா, நிறவெறி ஆட்டத்தில் ஈடுபட்டு அங்குள்ள வெள்ளையரல்லாத மக்களுக்குச் செய்துவரும் அநீதிகளை, உலகிலுள்ள நாகரீக நாடுகள் எல்லாம் பலவகைகளிலும் கண்டிக்கக் கடமைப்பட்டுள்ளன.

இதற்கு மாறாக பிரிட்டிஷ் எம். ஸி. ஸி. ஸ்தாபனத்தார், தென்னாபிரிக்க கிரிக்கெட் கோஷ்டியை பிரிட்டனில் விளையாட அழைத்ததை பிரிட்டிஷ் பொதுமக்கள் மட்டுமன்றி, காமன்வெல்த்தைச் சேர்ந்த பல நாடுகளும் கண்டிக்கவே, பிரிட்டிஷ் அரசாங்கம் பணிந்து வந்து இந்த அழைப்பை வாபஸ்பெறும்படி செய்தது. அழைப்பே அனுப்பாமலிருப்பதைவிட, விடுத்த அழைப்பை வாபஸ் பெற்றது, தென்னாபிரிக்காவுக்கும் அதன் நிறபேதக் கொள்கைக்கும் பெரிய அடியாகும்.

பிரிட்டனின் இந்தத் தீர்மானத்தைக் கேட்டதும், இந்தியாவுள்ளிட்டு பல காமன்வெல்த் நாடுகளும், எடின்பரோவிழாவில் கலந்து கொள்வதாகத் தெரிவித்தன. இதிலிருந்து காமன்வெல்த் உறவுகளும் பலப்படுவது குறிப்பிடத்தக்கது. தென்னாபிரிக்கா தனது வர்ணவாதக் கொள்கையைக் கைவிடுவது அவ்வளவு சுலபமல்லவென்றாலும், இவ்விதம் அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்தானே.

சிறிமாவோ

## 'புலியின் வாலைப் பிடித்திருக்கிறார்'

பதுளை, ஞாயிறு

துரதிர்ஷ்டவசமாகப் புலியின் வாலைப் பிடித்துக்கொண்டு திரியும் திருமதி சிறிமாவோ குறித்து நான் ஒன்றும் கூறவிரும்பவில்லை. அவரைக் குறித்து நான் இரக்கப்படுகிறேன்.

கண்டகெதரவில் நடைபெற்ற ஐக்கியதேசியக்கட்சியின் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும்தொடர்ந்து பேசுகையில் ''கம்யூனிஸ புலியினால் திருமதி பண்டாரநாயக்கா இறுதியில் விழுங்கப்பட்டுவிடக் கூடும் என நான் பீதியடைகிறேன். மற்றநாடுகளில் கம்யூனிஸ்ட்டுகளை ஆதரித்தவர்கள் தாங்கள் செய்த ஆபத்தான தவறையிட்டு வருந்துகிறார்கள். எந்தநேரத்தில்மார்க்ஸியவாதிகள் அதிகாரத்துக்கு வந்தாலும் ஜனநாயகத்தையும் மக்களையும் நாம் காப்பாற்றக்கடமைப்பட்டவர்கள் மார்க்ஸிய வாதிகளை ஒரு பொழுதும் ஆட்சிபீடத்துக்கு அனுப்பி வைக்கக்கூடாது'' எனக் கூறினார்.

ஜனநாயக பண்புக்கும் கொள்கைக்கும் முரண்பாடாகும். ஒவ்வோர் தொகுதியிலுமுள்ள பெரும்பான்மை மக்கள் ஒத்த கருத்துடையவர்களாயிருக்க முடியாது. அவர்களின் அபிலாஷைகள் தேவைகள் மாறுபாடு உள்ளனவாயிருப்பது இயல்பு.

ஒருவருக்கு பசிதீர்தல், இன்னொருவருக்குத்தொழில் பெறல், இன்னொருவருக்குப் போக்குவரத்து வசதி, கலாச்சாரம், ஆடம்பர வாழ்வு, என இவ்வாறு பற்பல தேவைகள் பலரின் தேவைகளாக அமையும். எனவே ஒரு குறிப்பிட்ட கட்சியின் கொள்கையடிப்படையில் எல்லோரும் தேர்தலில் வெற்றிபெற முடியாது. எனினும் பாராளுமன்றத்தில் ஏகோபித்த குரல் எழுப்புவதற்கு வழியுண்டு. எவ்வாறு? தமிழ் பேசுவோர் அனைவருக்கும் தேவையான அடிப்படை உரிமைகளைப் பேணுவதற்கு எல்லோரும் ஒத்த கருத்துடையர் தமிழ் மொழிக்கு அந்தஸ்து, பிரதேச பாதுகாப்பு. வேலைவாய்ப்பு, சுகாதார வசதி, மக்களின் பாதுகாப்பு என்பனவற்றைக் கூறலாம். வீதி அமைத்தல், மதகுகட்டல், நீர்ப்பாசனம், பாடசாலைகளை விருத்திசெய்தல், தபால் கந்தோர் அமைத்தல் முதலிய சிறுதேவைகளைப் பாராளுமன்ற உறுப்பினரால்தான் அமைப்பித்துக்கொடுக்க முடியும் என்பது தவறு. உண்மை ஜனநாயகம் அமையப்பெற்ற நாட்டில் பொதுநல சங்கங்களும் அரசாங்கத்துடன் தொடர்புகொண்டு உதவிபெற்று நாட்டை முன்னேற்றலாம்.

எனவே தமிழ் பேசுவோர் சார்பில் பாராளுமன்றம் செல்பவர்கள் முற்கூறப்பட்ட அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கத்தை முன்வைத்து, கட்சிக்கொள்கைகளில் சிலவற்றை வற்புறுத்தாது,

செம்பியன்பற்று

## பிலிப்புநேரியார் திருநாள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

செம்பியன்பற்று அர்ச் பிலிப்பு நேரியார் திருநாள் இம்மாதம் 24ம் திகதி நடைபெறவிருக்கிறது. அன்று தினம் 75 பிள்ளைகளுக்கு வணக்கத்துக்குரிய அன்ரனி ஆண்டகையால் உறுதி பூசுதல் அளிக்கப்படும் அடுத்த நாள் வேஸ்பரும் திருமணித்தியாலமும் நடைபெறும் 26ம் திகதி காலை திவ்ய பாடற்பூசையுடனும் திருச்சுருப ஊர்வலத்துடனும் விழா முடிவுறும்.

நடைபெற்ற பிரசாரங்கள் தான் பாராளுமன்ற உறுப்பினரிடையே தனிப்பட்ட முறையில் குரோதங்களை வளர்த்து, பழிவாங்கும் நிலையை ஆக்கியுள்ளது. கட்சிகளும் மக்களின் ஆதரவை இழக்கின்றன. ஒரு கட்சியின் சார்பில் ஒரு தொகுதிக்கு ஒருவரே திரும்பத்திரும்ப தேர்தலில் நிறுத்தப்படுவதும் இந்நிலைமைக்கு ஒரு முக்கிய காரணமாகும். இந்நிலைமாற ஒரு வழியுண்டு ஒரு கட்சியின் சார்பில் தொடர்ந்து மும்முறை பாராளுமன்றம் சென்றவர், நான்காம் முறை தேர்தலில் நில்லாது விலகவேண்டும். இதனால் இருவேறு கட்சிகளுக்குள் வளர்க்கப்பட்ட வேற்றுமை உணர்ச்சிகள் குறுகவும், திட்ட அடிப்படையில் ஒன்று சேரும் வாய்ப்பும் உண்டாகும்.

குறிப்பிட்ட ஒருவர் திரும்பத்திரும்ப தேர்தலில் நிற்பின் கட்சியின் செல்வாக்கு படிப்படியே குறைந்து அழிவெய்தும்என்பதை ஓர் உதாரணம்மூலம் அறிந்து கொள்ளலாம். பொது நலங்கருதி சங்கக்கடைகள் உண்டாக்கப்பட்டன வென்பதை எவரும் அறிவர் சங்கநிர்வாகசபை கடையை நடாத்த ஒரு மனேஜரை நியமிக்கும் மனேஜர் சங்கக்கட்டுப்பாட்டுக்கு அமைந்துகடமையாற்ற வேண்டுமென்பது நிபந்தனைகளுளொன்றுமனேஜர் நாளாந்தம் சங்க அங்கத்தவர்களுடனும் பொதுசனங்களுடனும் தொடர்புகொள்வதால் அவர்களுக்குச் செல்வாக்கு வளர்வது இயல்பே இந்நிலையைக் கைமுதலாகக் கொள்ளும் சிலமனேஜர்கள் அடுத்தவருடாந்தக்கூட்டத்தில்தமக்குச் சார்பான நிர்வாக சபைகளை அமைத்து விடுகின்றனர். இதன்முடிவு என்ன மனேஜரே நிர்வாகசபை சபையே மனேஜர் சங்கக் கடைக்கு மூடுவிழா.

ஒரு பாராளுமன்ற உறுப்பினரே அவர் மறையும் வரை தேர்தலில் நிற்பது ஜனநாயகமாகாது நிற்பின் கட்சிக்குப் புத்துணர்ச்சியும் வளர்ச்சியும் உண்டாகாது ஊழல் இடம் பெறஏதுவுண்டாகும் அன்றியும் குறித்த ஒருவரே தொடர்ந்து இருப்பின் அவர் மறையும்போது அனுதாபம்என்ற போர்வையில்,

அவரின் மனைவியோ மகனோ, மகளோ, தேர்தலுக்கு நிறுத்தப்படலாம் இவ்வாறு அனுமார் வால்போல் நீளும் பதவி ஒரு தனிப்பட்ட மனிதனின் கையில் அதிகாரத்தைக் குவிக்கும். இந்நிலை மிக ஆபத்தானது இன்னும், தொடர்ந்து

பேராதனை பல்கலைக்கழக ரசாயன விரிவுரையாளர் கலாநிதி இ. நித்தியானந்தன் யாழ்ப்பாணம் கன்னியாஸ்திரிமட மாணவிகள் மத்தியில் பேசுகையில் இப்படிக் கூறினார்.

ஏச். எஸ். சி. யூனியன் மாணவிகள் கலாநிதியைக் கௌரவிக்குமுகமாக இவ்வைபவத்தை ஏற்பாடு செய்திருந்தனர். கலாநிதி இங்கு 'சுற்றுப்பிரயாணமும் கல்வியும்' என்னும் பொருள் பற்றி சொற்பொழிவாற்றினார்.

லண்டனில் மூன்று வருடகாலம் இரசாயனத்தில் பட்டப்படிப்புப் பயின்றுவிட்டு இப்போதுதான் திரும்பியுள்ளார் கலாநிதி நித்தி. இவர் அங்கிருந்த காலத்தில், பிரான்ஸ், கிழக்குஜெர்மனி, மேற்கு ஜெர்மனி, சுவீடன், இத்தாலி போன்ற பல்வேறு நாடுகளுக்கு விடுதலையைக் கழிக்கச் சென்று அங்குள்ள பல இடங்களைப்பார்த்து மக்களுடன்பழகி பரந்த அறிவைப்பெற்றுள்ளார்,

கன்னியாஸ்திரிமட மாணவிகள் மத்தியில் நேற்று இவர் பேசியபோது இந்த அனுபவம் வெகுவாகத்தெரிந்தது.

'நித்தி அவர்கள் சொற்பொழிவாற்றியபோது தான் சென்ற நாடுகளில்தான் கண்ட சிறப்பியல்புகளைத் திரைப்படம் மூலம் மாணவிகளுக்குக் காட்டி சுலபமாகவும், இனிமையாகவும் விளக்கம்கொடுத்தார்.

### சீதனக்கொடுமை

''வெளிநாடுகளுக்கு நாம் சென்றுவர முடியாததற்கு முக்கிய காரணம் பொருளாதாரப் பிரச்னைதான். அதன் அடிப்படையை நாம் கவனிக்கவேண்டும். அடிப்படையை நோக்கும்போது சீதனக்கொடுமைதான் முக்கிய காரணமென்பது தெளிவாகும், பெற்றோர்கள் தாம் உழைப்பதையெல்லாம் தன் பெண்பிள்ளைகளுக்கு சீதனம் கொடுப்பதற்குச் சேர்த்து வைக்கிறார்கள் ஆனால் வெளிநாடுகளில் அப்படியில்லை உழைப்பதை நன்கு அனுபவிக்கிறார்கள். விடுமுறைகளுக்கு வெளிநாடுகளுக்குச் சென்று வருகிறார்கள் நமது பிள்ளைகள் பக்கத்து ஊருக்கே செல்ல முடியாதவர்களாக இருக்கிறார்கள்' என்று கலாநிதி நித்தியானந்தன் கூறிவிட்டு 'சீதனப் பிரச்னை'யை அகற்றவும் வழிசொன்னார்.

மாணவிகளுக்கு உற்சாகம் பிறந்தமாதிரி. ஆடாமல் அசையாமலிருந்தபடி, பேச்சை ஆழமாக நெஞ்சில் பதித்துக் கொண்டார்கள். அவர் தொடர்ந்தார்

மாணவிகளை நன்கு கல்வி கற்க வைக்கவேண்டும் அவர்கள் உயர்கல்வி பெற்றுத் கல்வி கற்கும் நாம் கிணற்றுத்தவளை'களாக இருக்கக்கூடாது. கிணற்றுத்தவளைகளாக இருந்தால் வாழ்நாள் முழுவதும் நாம் குறுகிய மனப்பான்மையுள்ளவர்களாகவே இருப்போம்.

### 'குறுகிய' பட்டதாரிகள்

இக்கூட்டத்தில்பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் பற்றியும் 'நித்தி' கூறினார், வெளிநாடுகளுக்கு அவர்கள் சென்று வந்திருந்தால் சின்னச்சின்ன விஷயங்களுக்காகச் சண்டை போட்டுக்கொண்டு, பல்கலைக்கழகம் மூடுமளவுக்கு நிலைமை நீடித்திருக்கமாட்டாது. ஒரு கட்சிப்பத்திரிகையை விற்க வந்த ஒரு சின்னப்பையனை, எதிர்க்கட்சி பட்டதாரி மாணவர்கள் தாககினார்கள். பாவம் அந்தப் பையன்! அவனுக்கு என்ன தெரியும்? பிழைப்பதற்காக பத்திரிகை விற்க வந்தான்! அதற்காக அந்தப் பையனைத் தாக்குவதா? 'குறுகிய' மனப்பான்மையுள்ள மாணவர்களாக இவர்கள் இருப்பதற்குக் காரணம் வெளிநாடுகளுக்குச் சென்று வராததே' என்று நல்லதொரு விளக்கத்தை அளித்தார்.

'தமிழர்களைப் பொறுத்தவரையில் தங்கள் பெண்களை வீட்டுக்குள் பூட்டிவைக்கும் ஒரு நிலை ஒரு காலத்திலிருந்தது. ஆனால் இப்போது அந்நிலை மாறி ஓரளவு வெளியில் கல்வி கற்குமளவுக்கு மாறிவிட்டது. கட்டுப்பாடுகள் ஒரு வரைப் பாதுகாக்க மாட்டாது வெளியுலகையும் பெண்கள் பார்கக வேண்டும். வெளியிலுள்ளவர்களுடன் பழக வேண்டும். இதனால் பெண்கள் ஒன்றும் கெட்டுப்போய் விடமாட்டார்கள். வெளிநாட்டுப் பெண்கள் தன்னந்தனியனாக பல வெளிநாடுகளுக்குச் சென்று வருகிறார்கள், அதனால் அவர்கள் வழிதவறி நடந்துவிடவில்லை பதிலாக

## உயிரைப் பலி எடுத்தது

யாழ்ப்பாணம், ஞாயிறு

சீதனப்பிரச்னை காரணமாக மனமுடைந்த இளம் பெண் ஒருவர் கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார். யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டவீதியைச் சேர்ந்த அம்பலவாணர் மகள் கனகாம்பிகை வயது 20) என்பவரே இவ்விதம் மரணமானவராவர்.

கடந்த 8 மாதங்களுக்கு முன்னர் இவருக்கு விவாகப் பதிவு நடைபெற்றது. இவருக்குச் சீதனமாகக் கொடுக்கப்பட்ட காணியை இவரது சகோதரி ஒருவர் ஈடுவைத்திருந்ததாகவும், விவாகத்துக்கு முன்னர் கடனை மீட்டுத்தரும்படி கேட்டதாகவும், இதிலிருந்து மனக்கசப்பு ஏற்பட்டிருந்ததாகவும் விசாரணையில் தெரிவிக்கபட்டது.

மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் விசாரணைநடத்தினார். விவாகப்பதிவு செய்துகொண்ட திருச்செல்வம் என்பவரும் சாட்சியமளித்தார். தற்கொலை எனத்தீர்ப்பு வழங்கப்பட்டது.

## 'சுயநலமே தவிர தமிழ் மக்கள் நலன் கருதியல்ல!'

கோப்பாய், ஞாயிறு

''மாவட்டசபைகள் மூலமே தமிழர்களது உரிமைகள் பாதுகாக்கப்படமுடியும், அவர்கள் சுயமரியாதைகளுடன் வாழலாம் எனப் பிரசாரம்செய்யும் சமஷ்டிவாதிகள் டட்லிசேனநாயகா அரசாங்கம் மாவட்டசபை மசோதாவை நிராகரித்தவுடன் யு, என். பியை விட்டு வெளியேறாத காரணம் சுயநலமே தவிர தமிழ் மக்கள் நலன் கருதியல்ல. பின்னர் கோணேசராலய புனிதநகர்ப் பிரச்னையைச் சாட்டாகவைத்தே வெளியேறினார்கள். இது தமிழ் மக்களை ஏமாற்றும் செயலாம்''

நீர்வேலி கந்தசுவாமி கோவிலடியில் நேற்று மாலை நடைபெற்ற தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் பேசுகையில் அட்வகேட் திரு, எம்.பி. யோகசுந்தரம் கூறினார்.

பண்டிதர் திரு நீ சி முருகேசு தலைமையில் அபேட்சகர் திரு. ரி குணரத்தினத்தை ஆதரித்து இக்கூட்டம் நடைபெற்றது.

திரு. யோகசுந்தரம் மேலும் பேசுகையில் கோணேசர் ஆலயத்தை அரசாங்கம்தான் புனித நகராக்க வேண்டுமென்ற கட்டுப்பாடில்லை அதற்கு சட்டம் தேவையற்றது. இந்துமக்களே அதனைப் புனித நகராக அமைத்துக் கொள்ள முடியும். அதுமாத்திரமல்லமுஸ்லிம்களுக்கென பல்கலைக்கழகமொன்று அமைப்பதற்கான மசோதாவை வாக்கெடுப்பில் கைநழுவவிட்டு ஓடியதனாலேயே இன்று முஸ்லிம் மக்கள் சமஷ்டிக் கட்சியினரை எதிர்க்கிறார்கள். இதுவே அவர்களின் கடந்தகால சாதனைகளாகும். 48ம் ஆண்டிலிருந்து 56ம் ஆண்டுவரை தலைநிர்ந்து வாழ்ந்த தமிழினம் தமிழரசுக்கட்சி தலைமைப் பீடத்திற்கு வந்த பின்னர்சுயமரியாதைகுன்றி உரிமைகளிழந்து வாழநேரிட்டது என்றார்.

டாக்காவில்

## பொலிஸ்-தொழிலாளர்மோதல் பத்து பேர் பலியாகினர்

டாக்கா, மே 23

பாகிஸ்தானில் டாக்கா நகரில் உலோக தொழிற்சாலை யொன்றில் வேலைநிறுத்தத்தில் இறங்கியிருக்கும் தொழிலாளர்களுக்கும் பொலிசாருக்குமிடையில் ஏற்பட்ட மோதலில் 10 பேர் கொல்லப்பட்டார்கள் இறந்தவர்களில் பொலிஸ் சுப்பிரின்டன் ஒருவரும் அடங்குவார்.

தொழிற்சாலையின் யந்திரப் பாகங்களை அப்புறப்படுத்துவதற்குசில தொழிலாளர்கள் முயற்சிசெய்த போது பொலிசார் சுட்டனர். ஏராளமானவர்கள் காயமடைந்தனர்.

## மரண அறிவித்தல்

வைத்தியலிங்கம்

தில்லையம்பலம்

தெய்வானைப்பிள்ளையின் கணவரும், காலஞ்சென்ற கந்தவனம் பெண் தையல்நாயகி, தில்லையம்பலம் மகாதேவா ஆகியோரின் தந்தையும், கந்தவனத்தின் மாமனும் சித்திரா, இரத்தினம், மகேசன், கணேசன் இரஞ்சன், வாசுகி, மனோகரி ஆகியோரின் பாட்டனுமான திரு வைத்தியலிங்கம் தில்லையம்பலம் காலமாகிவிட்டார் 24-ம் திகதிஞாயிற்றுக்கிழமை காலை 11மணியளவில் கோம்பையன்மணல் மயானத்தில் சமக்கிரிகைகள் நடைபெறும். 286நாவலர் வீதி, கைலாசபிள்ளையார்கோவிலடி நல்லூர், யாழ்ப்பாணம். 2130

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970 ம் ஆண்டு மே மாதம் 24-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org